ஸம்புடம் 12
ஸஞ்சிகை 12

ஸ்ரீ:

விஜய ஹூ
மார்கழி மீ

554

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0—4—0

வர்ஷச்சந்தா
ரூபாய் 3-0-0

DECEMBER 1953
VOL 12 NO 12.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	370
2.	மைஸூரில் ராஜோபசாரம் [ஸ்ரீ. உப. வித்வான், புரிசை நடாதூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]	
3.	ஆழ்வாராசார்யர்களின் அவதாரம் [ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம் நரஸிம்ஹாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]	377
4.	திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L திருப்பதி.]	379
5.	நற்போதுபோக்கு [ஸ்ரீ. உப. ஒரகடம் K. ஸுதர்சநாசார்யஸ்வாமி, ரிடையர்டுதமிழாசிரியர், அவளூர்.]	383
6.	ஹம்ஸஸந்தேசம் [ஸ்ரீ. உப. வித்வான் A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A., B. L., திருச்சி.]	385
7.	மார்கழிமாதம் [ஸ்ரீ. உப. மாம்பாக்கம் வங்கீபுரம், R. லக்ஷ்மீநாராயணாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	387
8.	ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள் [ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, வேதாந்தசிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை தலைமை ஆசிரியர், பாதூர்.]	390
9.	விஜயகீதம் [ஸ்ரீ. உப. பாதூர் தூப்புல், ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்.] [ஸ்ரீ. உப. அத்தி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்.]	393

[குறிப்பு:— ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர விஷயமாகவும், 43-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் திருநக்ஷத்ரவிஷயமாகவும் சென்னை, பாதூர் முதலிய பலவிடங்களிலிருந்து செய்திகள் வந்துள்ளன, அவகாசக் குறைவினால் உடனே ப்ரசுரிக்க முடியவில்லை. பின் ஸஞ்சிகைகளில் ப்ரசுரிக்கப்படும்.

ஸம்பாதகர்]



ஸ்ரீ அஹோபிலமடம் **43**-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப
ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

Block Kindly Supplied by 'Seva' Office.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 12 } விஜய ௵ மார்கழி ௴ {ஸஞ்சிகை 12

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑍃𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाच मिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमोभगवते पुरुषाय तस्मै ॥

भक्तेषु भक्तेन स मानितस्त्वया
पुरीं वसन्नेकनिशां महासुखम् ।
बतापरेद्युर्द्रविणं विना ययौ
विचित्ररूपस्तव खल्वनुग्रहः ॥

'(பரம பாகவதரான) குசேலர், பக்தர்கள் வசப்பட்ட உன்னால் ஓர் இரவு கௌரவிக்கப் பட்டவராய் மிகுந்த ஸந்தோஷத்துடன் நகரில் வசித்து, மறுநாள் தனமில்லாமலேயே திரும்பினார்; உன் அநுக்ரஹம் விசித்ரரூபமானது' இவ்வாறு க்ருஷ்ணபரமாத்மாவைக் குறித்து ஓர் பக்தர் ஸ்தோத்ரம் செய்கிறார். தன் கிராமத்தை அடைந்த குசேலர் தனக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டத்தைக் கண்டு வியப்படைந்தார். தான் நேரிடையாக க்ருஷ்ணனை ஐச்வர்யத்திற்காகப் ப்ரார்த்திக்காததால், க்ருஷ்ணனும் நேரிடையாக ஒன்றும் தன்னிடம் திருவாய் மலர்ந்தருளவில்லை என்று எண்ணினார் போலும்.

ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன் தன்பலவிபவாவதாரங்களிலும் பக்தனைக் காப்பாற்றி பக்தியின்பெருமையை விளக்குகிறான். பரமபக்தனான ப்ரஹ்லாதாழ்வானைக் காப்பாற்றினவன் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன். கருணையே வடிவாய் தன்னிடம் பக்திமேலீட்டால் சரணடைந்தவனைக்காப்பாற்றவே அவதரித்தவன் ஸ்ரீரகுவீரனாகிய ராகவன். அதேபோல் பக்தியின் பெருமையை உலகத்திலுள்ளோர்க்கு பற்பல விதங்களில் எடுத்துக்காட்டியவன் ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா. இப்பெருமையை வெகு அழகாக பக்தர்கள் கொண்டாடுவதை நாம் காண்கிறோம்.

'श्रीकृष्ण त्वत्पदोपासनमभयतमं बद्धमिथ्यार्थदृष्टे-
र्मर्त्यस्यार्तस्य मन्ये व्यपसरति भयं येन सर्वात्मनैव ।
यत्तावत् त्वत्प्रणीतानिह भजनविधीनास्थितो मोहमार्गे
धावन्नप्यावृताक्षः स्खलतिनकुहचिद्देवदेवाखिलात्मन् ॥

ஹே! க்ருஷ்ணா! ஸ்திரமல்லாத வஸ்துக்களையேபார்த்துக்கொண்டும், துக்கத்தினால்பீடிக்கப்பட்டும் இருக்கிற மானிடனுக்கு உன் பாதஸேவனமே ஸகல பயத்தையும் போக்கடிக்கக் கூடியது; அதனால் பயம் முழுவதும் அகலுகிறது. ஹே! தேவாதிதேவனே! ஸர்வவ்யாபியே! உன்னால் உபதேசிக்கப்பட்டபடியே உன்னை பஜிப்பதின் மார்க்கத்தை, மார்க்காந்தரத்தைப் பார்க்காமலேயே (பராமர்சிக்க சக்தியற்றவனாகவே) அவலம்பித்து, வழிதவறுவதே இல்லை.

அதாவது:— உலகில் உள்ளமானிடன் '**नहि सर्वः सर्वं जानाति**' எல்லோரும் எல்லா வித்யைகளையும் அறிவதில்லை என்றபடி பல ஶாஸ்த்ரங்களைக் கற்காதபோதிலும், பகவத் பக்திமேலீட்டால், பகவதுபதேசங்களை மாத்திரம் மனத்திற்கொண்டு அதன்படியே நடந்து நற்கதியை அடைகிறார்கள் என்ற கருத்தை பல புராணங்களில் உபாக்யானரூபங்களில் நாம் படித்திருக்கிறோம். நமக்கு முக்யமாக வேண்டுவது பகவத்பக்தியே. ஸர்வேச்வரனும் பக்தபராதீனனே. ஆதலால் பகவத்பக்தியில் ஈடுபடவேண்டியது மிகவும் அவச்யம். நாம் இம்மாதிரியான பகவத்பக்தியில் ஈடுபடுவதற்குப் பல வழிகள் உண்டு. அவைகளில் முக்யமானது ஆசார்ய கடாக்ஷம்.

'भक्तेरुत्पत्तिवृद्धी तव चरणजुषां सङ्गमेनैव पुंसा-
मासाद्ये पुण्यभाजां श्रिय इव जगति श्रीमतां सङ्गमेन ।
तत्सङ्गो देव भूयान्मम खलु सततं तन्मुखादुन्मिषद्भि-
स्त्वन्माहात्म्यप्रकारैर्भवति च सुदृढा भक्तिरुद्धूतपापा ॥'

(உலகில் ஐச்வர்யம் என்பது ஐச்வர்யம் உள்ளவர்களின் ஸங்கமத்தால்தான் உண்டாகும். அதுபோல் ஒருவனுக்கு பக்தி உண்டாவதென்பது அவனுடைய பாக்யவசத்தால் (பரம) பக்தர்களின்ஸமாகமத்தால் உண்டாகும். ஹே பரமாத்மன்! (பகவத்) பக்தர்களின் ஸமாகமத்தையே நான் விரும்புகிறேன்.)

அதன் மூலமாக அவர்களின் பக்திப்ரவாஹமான உன்னுடைய பலவித குணகீர்த்தனங்கள் உன்னிடம் எனக்குள்ள பக்தியை பலப்படுத்தி என்பாபங்களைப் போக்கி உன்னிடம் எனக்குள்ள பக்தியை ஸ்திரப்படுத்தும்.

பக்தர்களின் ஸமாகமத்தால் ஒருவன் பகவத்பக்தனாகிறான் என்பதை நாம் பல புராணக் கதைகளில் பார்க்கிறோம். உதாரணமாக பரம பாகவதரான நாரதமஹரிஷியின் ஸதுபதேசத்தால் ப்ரஹ்லாதனின் தாய் பரம பாகவத சிரோமணியாக ஆவதையும், அவள் கர்ப்பவாஸத்திலுள்ள ப்ரஹ்லாதாழ்வானும் உலகில் ஜனிப்பதற்கு முன்பே பரமபக்தனாக வளர்ந்த பிறகு தன் தோழர்களையும் பரமபாகவதர்களாகச் செய்ய முயற்சிப்பதையும் நாம் காண்கிறோம்.

'श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनम् ।
अर्चनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम्' ॥

என்று ப்ரஹ்லாதாழ்வான் பக்தியின் ஒன்பது படிகளைத்தன் தோழர்களுக்கு உபதேசிக்கிறான். இப்பேற்பட்ட பகவத்பக்தி பக்தர்களின் ஸமாகமத்தாலும் ஸதுபதேசத்தாலும்தான் ஏற்படுகிறது. விசேஷமாக ஸதாசார்ய கடாக்ஷத்தால் நமக்கு உண்டாகிறது. ஆகலால் ஆசார்யாநுக்ரஹம் நமக்கு பூர்ணமாக இருக்கவேண்டி आचार्यदेवो भव என்றபடி நாம் முயற்சிக்கவேண்டும்.

* * * * * * * *

ஸ்ரீமதழகியசிங்கரின் ஸஞ்சாரம்

பெங்களூரிலிருந்து திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளுவதாக ஸஞ்சாரம் புறப்பட்ட ஸ்ரீமதழகியசிங்கர் மைஸூர் மஹாராஜாவின் ப்ரார்த்தனைக்கிணங்க முதலில் மைஸூருக்கு எழுந்தருளியாயிற்று. ஹிந்துமத பண்பாட்டில் மிகவும் ஊக்கம் கொண்ட மைஸூர் மஹாராஜாவினுடையவும், மற்றைய அரசாங்க அதிகாரிகளுடையவும், பொதுமக்களுடையவும் அமோகமான உத்ஸாஹம்வெளிப்படையாயிற்று. தினசரிப் பத்திரிகைகள் மூலம் ஸ்ரீமதழகியசிங்கருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு இதற்கு முன் காணப்படாத பெருமையுடன்கூடியிருந்ததாக நாம் படித்து ஸந்தோஷித்தோம். பரம்பரையாகவே வைதிகசக்ரத்தையுள்ளமைஸூர் மஹாராஜா ஸ்ரீமதழகியசிங்கர் போன்ற மஹான்களின் க்ருபைக்குப் பாத்திரர் ஆவது இயல்பே.

மைஸூரில் பன்னிரண்டு தினங்கள் எழுந்தருளியிருந்து அங்கிருந்து முதலில் ஸங்கல்பித்தபடி திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளியாயிற்று.

* * *

மைஸூரில் ஸ்ரீ அஹோபில மடத்தின் வித்வத் ஸதஸ்

வேதோக்தமான தர்மங்களையும், அதற்கு அவச்யமானதும்அநுகுணமுமானவேத,சாஸ்திரங்களையும் ப்ரகாசப்படுத்தவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்வதே ஸ்ரீ ஸந்நிதியின் பெருமை. அதையொட்டி ப்ரஸித்த ஸ்தலமாகியமைஸூரில் ஸ்ரீ அழகிய சிங்கர் ஓர் வித்வத் ஸதஸ் கூட்டி பல ப்ராசீன பண்டிதர்களை ஆஹ்வானம் செய்து பல வாக்யார்த்தங்களையும், சாஸ்திரசர்ச்சைகளையும் கேட்டு ஆநந்திக்கும்படி இருந்தது. தூரதேசங்களிலிருந்து வேதாந்த, ந்யாய, மீமாம்ஸா, வ்யாகரண, ஜ்யோதிஷாதி சாஸ்திரங்களில் ப்ரஸித்தர்களான பண்டிதர்கள் இந்த ஸதஸ்ஸுக்கு எழுந்தருளியிருந்து இதில் அந்வயித்தார்கள். இப்பண்டிதர்களுக்கு மார்க்க வ்யயமும், வித்வத் ஸம்பாவனையும் ஸ்ரீமதழகியசிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்டது.

* * * * * * *

ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பல்லாண்டுகளுக்கு முன்பே ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43 வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் திருநாராயணபுரத்தில் வெகு விமர்சையாகக்

கொண்டாடப்பட்டதைப் பார்த்து நாம் எல்லோரும் ஸந்தோஷிக்கிறோம். ஸ்ரீமதஹோபிலமடத்தின் ஸ்தாபகரான ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திருவவதாரஸ்தலம் திருநாராயணபுரமே. நம் ஸ்ரீ அழகியசிங்கர் பட்டாபிஷேகாநந்தரம் திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளுவது இதுவே முதல் தடவை. பூர்வாச்ரமத்தில் பலஸமயங்களிலிந்த ஸ்தலத்திற்கெழுந்தருளியிருந்தபோதிலும் ஸ்ரீ அழகியசிங்கரின் முதல் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் இந்த புண்ய க்ஷேத்ரத்தில் கொண்டாடப்பட்டது ஸ்ரீமதழகியசிங்கரின் சிஷ்யகோடிகள் செய்த பாக்யமே. நம் பாரத நாட்டின் பல பாகங்களிலிருந்து திரள் திரளாக பல சிஷ்யர்கள் இந்த க்ஷேத்ரத்திற்கு வந்து ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனையும், ஸ்ரீமதழகியசிங்கரையும் பலகாலும் தெண்டனிட்டு க்ருதார்த்தர்கள் ஆனார்கள். திருநாராயணபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் 'செல்வப்பிள்ளை'. அதேபோல் நம் அழகியசிங்கரும் பூர்வாச்ரமத்தில் செல்வத்திலேயே பிறந்து வளர்ந்தவர். அதற்கு அநுகுணமாக ஸ்ரீமாலோலனின் பக்தகோடிகளின் க்ஷேமத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்ட ஓர் பெரிய ஸ்தாபனத்தின் அதிபராக எழுந்தருளியாயிருக்கிறது. இவ்வுலகத்திற்கு அவச்யமான ஐச்வர்ய ஸௌகர்யமும் பரலோகத்திற்கு உபகரிப்பதான ஜ்ஞாநாதிக்யம், பாரமைகாந்த்யம், வைராக்யம் முதலிய பல உயர்ந்த குணங்களுக்கு இருப்பிடமாக இருப்பதும் நம்போன்றவர்களின் பாக்யவிசேஷமே.

ஸ்ரீமதஹோபிலமடத்தில் எழுந்தருளியிருந்த எல்லா அழகியசிங்கர்களும் பற்பல உயர்ந்த அநுக்ரஹங்களால் சிஷ்யர்களைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். இந்த ஸம்ப்ரதாயமானது மேலும் மேலும் தழைத்து ஓங்குவதாகவே ஒவ்வொரு அழகியசிங்கரின் காலத்திலும் நாம் காண்கிறோம். **रामो विग्रहवान् धर्मः** என்றபடி ஸ்ரீ வீரராகவஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் தர்மாநுஷ்டாநங்களிலேயே ஊக்கமாக எழுந்தருளியிருப்பதையும் அதேபோல் சிஷ்யகோடிகளையும் சீர்படுத்துவதற்காக முயற்சித்துவருவதையும் நாம் காண்கிறோம். ஒவ்வொரு ஸந்தர்பத்திலும் பகவத் பக்தர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் தர்மாநுஷ்டாநங்களைப்பற்றி அழகாகவும், தெளிவாகவும், சுவர்ச்சிகரமாகவும் பொதுக்கூட்டங்களிலும் தனிப்பட்ட இடங்களிலும் உபதேசித்து வருவது உலகின் நல்லகாலத்தை எடுத்துக் காட்டுகிறதல்லவா. பகவத்குண கீர்த்தனங்களையும் அதற்காக நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளையும், நமது கடமைகளையும் ஒவ்வொரு நாளும் நம் ஸ்ரீ அழகியசிங்கர் எடுத்து உபதேசித்து வருவது நம் பாக்யத்தால் அல்லவா. **'स्वयमाचरते यस्मात् तस्मात् आचार्य उच्यते'** என்றபடி ஆசார்ய லக்ஷணங்களில் முக்யமானது தானநுஷ்டித்துக் காட்டுவதுதானே.

குபேர ஸம்பத்துப் போன்ற ஐச்வர்யத்தையும், ஸகல போகங்களையும் திரஸ்கரித்து **'देवं सेवितुमेव निश्चिनुमहे'** என்று ஸ்ரீ தேசிகன் ஸாதித்தபடி பகவத் பாகவத ஸேவநமே முக்யம் என்று எழுந்தருளியிருக்கும் நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீதேசிகனுக்கு ஒப்பானவர் என்பது மிகையாகாது. பகவத்பாதஸேவனத்தில் ஸ்ரீமதழகியசிங்கர் ஈடுபட்டிருப்பது போல் நாமும் ஈடுபட்டிருத்தல் வேண்டும் என்று நமக்கு உபதேசிக்கப்பட்டதாக ஆகிறதல்லவா.

'पूर्वभाषी च राघवः' என்றபடி பெரியமஹான்கள் தனக்குக் கீழ்ப்பட்டவர்களைக்கூட ஆப்தர்களாகவே கருதி தானே முதலில் குசலப்ரச்னம் செய்வது வழக்கம். அதேபோல் ஸ்ரீமதழகியசிங்கரின் ஒவ்வொரு பெருந்தன்மையான கார்யத்திலிருந்து புலனாகிறது. நம்போன்ற ஸாமான்யர்களிடத்திலும் மிகவும் கருணையுடனும், விச்வாஸத்துடனும் நாம் நல்வழிக்கு வரவேண்டும் என்ற பரிபூர்ண மனோரதத்துடனும் நம்மை அநுக்ரஹித்துவருவதை நாம் ஒவ்வொரு நாளும் அநுபவித்து வருகிறோம். பல தீவினைகள் சூழ்ந்த இக்கலியிலும் இப்பேற்பட்ட மஹான்கள் எழுந்தருளியிருப்பது பகவத் ஸங்கல்பமே.

'यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥'

என்று ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் வார்த்தைப்படி பகவதம்சமாகவே நம் அழகியசிங்

கர்கள் அவதரிக்கிறார்கள் என்பது மிகையாகாது.

இம்மாதிரி அவதரித்த நம் ஸ்ரீ அழகியசிங்கர் பல்லாண்டு எழுந்தருளியிருந்து பல தேசங்களுக்கு எழுந்தருளி பலகோடி சிஷ்யர்களையும், இதரர்களையும் நேரிலேயே அநுக்ரஹித்து வருப்படி ஸ்ரீமாலோலன் அருள்புரியும்படி நாமெல்லோரும் ப்ரார்த்திப்போமாக.

* * * * * * *

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு இப்பத்திரிகை வாயிலாக ஓர் விஜ்ஞாபனம் செய்துகொண்டது ஜ்ஞாபகமிருக்கலாம். ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா வெளியிடுவதில் ஏற்படும் செலவு சந்தாதாரர்களிடமிருந்து வஸூலாகும் தொகையைக் காட்டிலும் மிகவும் அதிகமாகவே இருக்கிறது. ஆனாலும் ஸ்ரீமதழகியசிங்கர் அதற்காக கவலை கொள்ளவில்லை. நிர்வாஹஸ்தர்கள் வரவு செலவையும் மற்றைய விவரங்களையும் பராமர்சிக்கும் பொழுது எல்லோருக்கும் ஓர் விஜ்ஞாபனம் செய்துகொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல சந்தாதாரர்கள் பழைய பாக்கி சந்தாக்கள் கொடுக்காமல் இருப்பதுடன் அது விஷயத்தில் தகுந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பது வருந்தத் தக்க விஷயமாய் இருக்கிறது. இந்த ஸஞ்சிகை ப்ரக்ருத ஸம்புடத்தின் கடைசி ஸஞ்சிகை. அடுத்த ஸஞ்சிகை முதல் இதுவரை சந்தா கொடுக்காதவர்களுக்கு ஸஞ்சிகைகளை நிறுத்தி விடுவதாகத் தீர்மானித்துள்ளோம் என்பதை ஸவிநயம் விஜ்ஞாபித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின்
நிர்வாகம்,

அடுத்த ஸஞ்சிகையை பெறாதவர்கள் ஷை ஸஞ்சிகை வேண்டுமென்று அபேக்ஷித்தால் சந்தாவை அனுப்பி விவரத்தைத் தெரிவித்தாலும், அல்லது V.P.P. மூலமாக அனுப்பும்படி எங்களுக்கு விவரம் தெரிவித்தாலும் ஸஞ்சிகைகள் அடுத்த ஸம்புடம் முதல் ஸஞ்சிகை ஆரம்பித்து அனுப்பப்படும். இல்லாவிடில் புது ஸஞ்சிகை அனுப்புவதாக உத்தேசம் இல்லை.

நிற்க ஆப்தர்களில் ஓர் சிலர் ஏதோ காரணத்தால் புது ஸம்புடம் வேண்டுமென்று அபேக்ஷிக்காமல் போகநேர்ந்தால், ஷை ஸ்வாமிகள் க்ருபையுடன் பழைய ஸம்புடங்களுக்கு தங்கள் சந்தாக்களை அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * * * *

நமது ராஜ்யத்தின் ஆரம்பக் கல்வியை பரிசீலனைசெய்வதற்காகஏற்படுத்தப்பட்டநிபுணர்களின்கமிட்டி பலகற்றறிந்தவர்களை விசாரித்து ஓர் ரிபோர்ட்டை அரசாங்கத்திற்கு ஸமர்ப்பித்திருக்கிறது,

ஆரம்பக்கல்வி பரிசீலனைக்
கமிட்டியின் ரிபோர்ட்

அதன்படி தத்காலம் நடந்து வரும் வெறும் எட்டுப்படிப்பு பலனளிக்காதென்றும், ஏதாவது வேறு வியாபாரங்களில் (கைத்தொழில்களில்) குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமென்றும் கூறி இருக்கின்றனர். புராதன காலந்தொட்டு நாட்டின் க்ஷேமத்தை உத்தேசித்து பிராஹ்மண ஸமூகத்தினர் தங்களுக்கும் ஸமூகத்தின் க்ஷேமத்திற்காகவும் பாடுபட்டே வந்திருக்கிறார்கள். ஸ்வதர்மத்தை காப்பாற்றவேண்டி பல தொழில்களிலும் ஈடுபட்டுமிருக்கிறார்கள். உதாரணமாக நூல் நூற்கும் பழக்கம் ஒவ்வொரு ப்ராஹ்மணச் சிறுவனுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டியது மிகவும் அவசியம். தவிர ஒவ்வொரு சிறுவனும் தன் நலனுக்காக வேஷ்டி துவைப்பது, வீட்டை சுத்திசெய்வது, சமைப்பது போன்ற பல தொழில்களில் ஸாமர்த்தியத்தை அடையவேண்டியது முக்யமாகக் கருதப்பட்டுவந்தது. ஒருவன் மற்றொருவனுக்காக ஓர் வேலை செய்தால் இழிவென்றும், தனக்காகச் செய்துகொண்டால் அதில் ஒரு விதமான இழிவு கிடையாதென்றும் பெரிய பெரிய மஹான்கள் அநுஷ்டித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனதுபற்றி நமது ஸமூஹத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களுக்கு இம்மாதிரி பயிற்சியை அளிக்கவேண்டியது மிகவும் அவசியம். அதுவுமன்றி இம்மாதிரியான ஸௌகர்யங்களை தேடிக் கொள்வதற்காக நாம் புதுப் புது பாடசாலைகளையும் ஏற்படுத்திக்கொள்ளவும் வேண்டும். அம்மாதிரி பாடசாலைகளில் நம் ப்ராசீன ஸம்ப்ரதாயங்கள் நிலை நிறுத்தப்படவேண்டும். சில தினங்களு

க்கு முன் லண்டன் நகரத்தில் உள்ள அந்நாட்டு ஸ்த்ரீகள் இந்திய ஸ்த்ரீகள்போல் ஆடையாபரணங்கள் அணிந்துகொள்ள ஆசைப்படுவதாக ஓர் ஸமாசாரத்தை தினசரிப்பத்திரிகையில் நாம் படித்தோம். நம் நாட்டு மக்கள் ஆடை உடுத்திக் கொள்வதின் ஸௌகர்யத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்த மாறுதல். அப்படியிருக்க நம் நாட்டில் மாத்திரம் பிள்ளைகளும், பெண்களும் நம் பழக்க வழக்கங்களை புறக்கணித்து அனாவசியமான புது வழக்கங்களை கடைபிடிப்பது ஏனோ? இப்பழக்கத்தில் ஸுமார் நூறு வருஷங்களுக்குள் ஏற்பட்ட மோஹம் இன்னும் விடப்படவில்லையே. நம் நாட்டு சீதோஷ்ண ஸ்திதியை அநுஸரித்து நம் ப்ராசீன வழக்கமே மிகவும் உயர்ந்தது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியிருக்க இயற்கைக்கு ஒத்துவராத ஓர் வழக்கத்தை நாம் ஏன் கடைபிடிக்கவேண்டும்? இப்படி நம் ஸம்ப்ரதாயத்தை அடிப்படையாகக் கொண்டு பல விடங்களில் ஆரம்பப் பாடசாலைகள் தாங்களாகவே ஏற்படுத்திக் கொள்வதுடன் இதரர்கள் ஏற்படுத்துவதற்கும் உதவி செய்யவும் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் இம்மாதிரியான ஓர் பெரு முயற்சி ஆரம்பித்தால் நாளடைவில் நம் ஸமூஹம் முன்னேற்றம் அடையும் என்பதில் ஸந்தேஹமில்லை.

கமிட்டியினர் சிறுவர்களுக்கு ஒவ்வொரு நாளும் மூன்று மணி நேரம் பாட போதனை போதுமென்றும் இதர நேரங்களில் கைத்தொழில்களில் ஈடுபடவேண்டுமென்றும் குறிப்பிட்டிருப்பதை நாம் முக்யமாக கவனிக்கவேண்டும். வகுப்பறைப் பாடபோதனை மூன்று மணி நேரம் தீர்ந்ததும் இதர நேரங்களில் தங்கள் பெற்றோர்களின் வியாபாரங்களில் ஈடுபடுவது என்பது மிகவும் சிலாக்கியமானதே. இம்முறை வெற்றிபெற வேண்டுமானால் அதிகவாரியான பிள்ளைகளை ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் சேர்ப்பதற்குவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தவிரவும் இம்மாதிரியான ஒரு முறை நாளடைவில் இந்தியா முழுவதும் அமுலுக்கு வரவேண்டியிருக்கும் என்றும் தங்கள் அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கின்றனர். அரசாங்கப்பணத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டுவரும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் பொதுவாகஎல்லாமக்களின்பொதுநலனென்று கருதப்படும் முறைகளை யநுஸரித்ததாகவேயிருக்கும். அம்முறை நம் ப்ராஹ்மண ஸமூகச் சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்றுநாம கூறமுடியாது. ப்ராசீன தர்மத்தை காப்பதற்காக நம் ஸமூஹத்தின் நிலைமையையும் பிற்கால க்ஷேமத்தையும் கருதி தகுந்த விசேஷ ஏற்பாடுகளுடன் நம் ஸமூஹத்தில் உள்ளவர்களே போதியக்கல்விச் சாலைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். கமிட்டி ரிபோர்ட்டின் ஒன்றிரண்டு அம்சங்களை மாத்திரம் இங்கு நாம் பரிசீலித்தோம். ரிபோர்ட்டு முழுவதையும் நன்கு பரிசீலித்து ஆவன செய்வது நம்முடைய அவஸரமான கடமை.

* * * * * * *

அரசியல் ஸம்பந்தமாக முக்காலத்திலும், இக்காலத்திலும் அரசியல் அறிவாளிகள் பற்பலவித ஆட்சி முறைகளை கூறுகின்றனர்.

தற்கால ராஜீயம்

புராதன காலத்து 'அரிஸ்டாடில்' போன்றவர்கள முடியரசு குடியரசு போன்ற ஆறுவித ஆட்சி முறைகளில் மக்களின் நலனைக் கருதி ஆட்சி புரியும் உயர்ந்த அரசனின் ஆட்சி முறையே எல்லாவற்றிலும் சாலச் சிறந்தது என்று கூறியுள்ளார்கள். ஆனால் மனிதப்போக்கு காலத்திற்கு காலம் மாறிக் கொண்டே வருவதையநுஸரித்து குடியரசே உயர்ந்தது என்று தற்காலம் கருதுகின்றனர். நம் நாட்டில் 'ராம ராஜ்யம்' என்று நாம் உதாரணத்திற்கு கூறிய போதிலும் குடியரசையேமக்கள் விரும்புவதை பார்க்கிறோம். ஆனால் குடியரசைசெம்மையாக நடத்துவதற்கு நாட்டு மக்களிடம் போதிய அறிவும் ஆற்றலும் அவசியம். ஸ்வயநலத்தை விரும்பாமல் நாட்டின் நலனையே கருதுபவர்கள்தான் அரசியல் தலைவர்களாக இருத்தல் வேண்டும். அப்படியில்லாமல்போனால் ஸமூஹ ஆட்சி சீர்கேடடையும். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் பெரும்பாலும் ஸ்வயநலம் அற்றவர்களாகவே இருந்தால்தான் அரசியல் கட்சித்தலைவர்களும் நேர்

த்தியுள்ளவர்களாக அமையமுடியும். அப்படியில்லாவிடில் பொறாமையும், சூதும் தலைவிரித்தாடி அரசியலை சீர்குலையச் செய்யும். இம்மாதிரியான ஓர் நிலை ஏற்பட்டால் ஜனங்களின் துரதிர்ஷ்டமே அதற்குக் காரணம். அதுசமயம் அறிவுள்ள மக்கள் ஆங்காங்கு கூடி தங்களுடைய உயர்ந்த கருத்துக்களை பொது மக்களுக்கு எடுத்துரைத்து அறிவாளிகளும் மேன்மை குணம் படைத்த சிலர்களுமே நம் தலைவர்களாக இருக்கவேண்டிய ஸௌகர்யங்களைச் செய்யவேண்டும். அதுவும் ஸாத்தியமில்லாமல்போனால் பொதுஜனங்களுக்கு வேண்டிய அளவு அரசியல் அறிவு ஏற்படும்வரை உயர்ந்தகுணமுள்ள ஓர் உயர்ந்த தனி அதிகாரியின் ஆட்சிக்குட்பட்டதாக நம் நாடு அடைக்கப்படுதல் வேண்டும்.

தற்கால அரசியலில் கட்சி முறைகளை அதிகமாகபங்கெடுத்துக்கொள்கின்றன. ஆனால் நாட்டின் நலனைக்கருதி ஒன்றிரண்டு கட்சிகளே அமையவேண்டும். கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் அந்நாட்டின் அரசியல் முறையும் அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும். இந்நிலை விரும்பத் தக்கதே அல்ல. பிரான்ஸ் தேசத்தில் இம்மாதிரி அரசியல் நெருக்கடி அடிக்கடி ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். இதேபோல் புதிதாக அமையும் ராஜ்யங்களிலும் பல்வேறு கட்சிகளில்லாமல் அரசியல்வாதிகள் ஸமரஸமான கொள்கைகளைக் கையாண்டால் நாட்டிற்கு பற்பல அபிவ்ருத்திகளைச் செய்யமுடியும். நாட்டின் நலனையே மனத்திற்கொண்டு எல்லோரும் ஒத்துழைத்தால்தான் மக்களுக்கு க்ஷேமமுண்டாகும். மக்களின் க்ஷேமத்திற்காகவே அரசியல் முறைகள் அமைக்கப் படுவதால் அதற்குத் தகுந்தவாறு ஒவ்வொருவரும் உதவி புரியவேண்டும்.

உலகில் தற்காலம் காணப்படும் பல நாடுகளும் தங்களுடைய ஸ்வயநலத்தையே பெரிதாகக் கருதி அந்நிய நாடுகளின் நலனை பாதிக்கும் முறையில் நடந்துகொள்வதென்பது மிகவும் வெறுக்கத் தக்க விஷயம். தங்களுடைய பொருளாதார, ராணுவமுன்னேற்றமே முக்யமென்று எண்ணுவது பிழையே. நமக்கு ஸமீபத்திலுள்ள இதர நாடுகளின் செழுமை நம்நாட்டையும் செழிப்புறச் செய்யும் என்பதை மறந்துவிடக் கூடாது. அந்நாடும் முன்னேற வேண்டும். அதற்கு எதிரிடையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் வேண்டும். இந்நிலை ஏற்படுவதற்கு அந்நாட்டின் தலைவர்களின்போக்கே காரணம். இதை நாட்டிலுள்ள அறிவாளிகள் தவிர்க்காமலிருந்தால் அவர்களுக்குக் குறையே ஏற்படும். அல்லது நாட்டில் அறிவாளிகளுக்குப் பஞ்சமேற்பட்டதாகவே அந்நியநாடுகள் கருதும். மற்றையநாடுகள் பலாத்காரமுறைகளிலும் சூழ்ச்சியான முறைகளிலும் தங்கள் அரசியலை நடத்தினால் மற்றைய உயர்ந்தநாடுகளும் அதைப் பின்பற்றவேண்டுமென்று எண்ணுவதும் பிழையே. நம் உயர்ந்த நோக்கங்களினாலும் கார்யங்களினாலும் இதரர்களையும் நாம் சீர்படுத்த முடியும். ஆரம்பத்தில் நமக்கு வெற்றி கிடைக்காமற்போனாலும் நாளடைவில் நாம் வெற்றிபெறுவோமென்பதில் ஸந்தேஹமில்லை. இவ்விஷயத்தில்நம்பாரதநாட்டின்வெளிநாட்டுக் கொள்கையை நாம் வெகுவாகப் பாராட்டவேண்டியிருக்கிறது. சுயநலம்மிகுந்த அந்நியநாடுகள் கூட இதை ஒப்புக்கொள்ளுகின்றன. இன்னும் மேன்மேலும் அபிவ்ருத்தி ஏற்பட்டு நம் நாடு உலகிற்கே ஒரு எடுத்துக்காட்டாக– ஒரு உயர்ந்தநாடாக சீக்கிரமே அமையும் என்று நாம் எண்ணமுடியும்.

* * * * *

உலகில் தோன்றியுள்ள ஜீவராசிகளில் மனிதன் பகுத்தறிவு உள்ளவனாக இருப்பதால் உயர்ந்தவனாக ஆகிறான். பகுத்தறிவைக் கொண்டு ஶரீரவளர்ச்சிக்குமாத்திரம் பலர் ப்ரயாஸப்படுகின்றனர்.

நமது கடமை

ஆத்ம வளர்ச்சிக்குப் பாடுபடுபவர் அவ்வளவாகக் காணக்கூடவில்லை. ஆனால் அரணிக்கட்டையில் நெருப்பு இருப்பதுபோல் ஒவ்வொருவருக்கும் ஆத்மீகவளர்ச்சியில் ஆற்றல் தன்னுள் புதைந்துகிடப்பதை எல்லோரும் அறிவதில்லை. தகுந்த அதிகாரிகள் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டு ஒவ்வொருவரிடமும் புதைந்துகிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் வளரும் சூழ்நிலை அதற்குத் தகுந்ததாக அமைந்திருந்தால் ஆத்மீகவளர்ச்சி ஏற்படுவது மிகவும்

199542

ஸுலபம். அம்மாதிரியான சூழ்நிலையை நாம் ஒவ்வொருவருமே செய்துகொள்ளவேண்டும். பண்டைக்காலத்து அறிவாளிகள் நன்காராய்ந்து அநுஷ்டாநத்தில் கொண்டுவந்து, பிறகு நமக்கு விட்டுச்சென்ற ப்ராசீன தர்மங்ளில் ஒரு குறைவும் ஏற்படாமல் நாம்நடந்துகொண்டால் நமக்கு அம்மாதிரி ஒரு ஆற்றல் தானாகவே உண்டாகும். உயர்ந்தஸமூஹத்திலுள்ள ஒருவன் தீயவழியில் செல்ல பயப்படுவான். ஒவ்வொருநாளும் ஸ்நாநம், ஜபதபாதிகள், ஆஹாரத்தில் சுத்தி முதலியவை நம்மால் கவனிக்கப்பட்டால் நம்முடைய மனத்தில் ஓர் உத்ஸாஹமும் தெளிவும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. வழக்கமாக ஸ்நாநஞ்செய்பவனுக்கு ஸ்நாநஞ் செய்யாமலிருந்தால் ஓர் அருவருப்பு ஏற்படுகிறது. சுத்தமான ஆஹாரத்தை உட்கொள்பவன் அசுத்தமான ஆஹாரத்தை அறவேவெறுக்கிறான். இதேபோல கடவுள்வழிபாடுகளிலும், ஜபதபாதிகளிலும் பழக்கப்பட்டவர்கள் அவைகளில்லாமல் இருக்கவேமாட்டார்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் மனநூல் ஆசிரியர்கள் கூறும் 'பழக்கவிதிகளே.' உயர்ந்த பழக்கவழக்கங்களை நாம் ஏற்படுத்திக்கொண்டால் அவைகள் நாளடைவில் நம்முடைய இயற்கை குணங்களாகவே ஆகிவிடும். பிறகு மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் உதவும். நாமும் சீர்படுவோம்; மற்றவர்களுடைய ஶரீர, ஆத்மீக வளர்ச்சிக்கும் காரணபூதர்களாக ஆவோம். இதைக்காட்டிலும் உலகில் நாம் செய்யக்கூடிய உயர்ந்த கார்யம் வேறு என்ன இருக்கமுடியும்? ஆதலால் நாம் எல்லோரும் நமக்கு ஏற்பட்ட நித்யகர்மாநுஷ்டாநங்களில் முழுமனத்துடன் ஈடுபடவேண்டும். இம்மாதிரியான ஓர் உயர்ந்த நிலையை எக்காலத்திலும் நம் ஸமூஹத்திலுள்ள எல்லோருக்கும் அநுக்ரஹித்தருளும்படி நமக்கு அறிவைப் புகட்டும் நமது உயர்ந்த ஆசார்யர்களும், பரமாசார்யனான ஸ்ரீ மாலோலனும் அநுக்ரஹித்தருளுவார்களாக.

*　　*　　*　　*　　*　　*　　*

ஸ்ரீமதழகியசிங்கரும் ஸ்ரீபரகாலஸ்வாமியும்

ஸ்ரீமதழகியசிங்கர் தன்ஜைத்ர யாத்ரையில் மைஸூர் மஹாராஜாவின் ப்ரார்த்தனைக்கிணங்க மைஸூர் எழுந்தருளின ஸமயம் மைஸூர் மஹாராஜா, அரண்மனை அதிகாரிகள் உள்ளூர் பலப்ரமுகர்கள், வெளியூரிலிருந்து இதற்காகவே எழுந்தருளியிருந்த பல பெரியமனுஷ்யர்கள்பண்டிதோத்தமர்கள் குதூஹலிகளான உள்ளூர் வாஸிகள் முதலிய ஆயிரக்கணக்கானவர்களால் வரவேற்கப்பட்டு மைஸூர் அரண்மனையிலும், பிறகு ஸ்ரீ அஹோபிலமடத்திலும் எழுந்தருளியாயிற்று. அது ஸமயம் ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனப்படி மைஸூரில் ஓர் வித்வத் ஸதஸ் நடந்தது. அதில் பல ஊர்களிலிருந்தும் பல பண்டிதர்கள் எழுந்தருளியிருந்து வாக்யார்த்தம் சொல்லியதைக் கேட்டு ஆநந்தித்தாயிற்று. எல்லாப் பண்டிதர்களுக்கும் வித்வத் ஸம்பாவனையும், மார்க்க வ்யயமும், ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹித்தாயிற்று.

அது ஸமயம் மைஸூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபரகாலஸ்வாமி நமது ஸ்ரீ அழகியசிங்கரை ஹயக்ரீவன் மங்களாசாஸநத்திற்கு எழுந்தருளும்படி ப்ரார்த்திக்கவே, ஸ்ரீமதழகியசிங்கரும் பகவத்பாகவத ஸேவையில் ஆஸ்தாதிசயத்தால், ஹயக்ரீவன் ஸந்நிதிக்கு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்தாயிற்று. ஸ்ரீமதழகியசிங்கரும், ஸ்ரீ பரகாலஸ்வாமியும் சில காலம் ஸம்பாஷித்தாயிற்று. பிறகு ஸ்ரீ பரகாலஸ்வாமியும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் மங்களாசாஸனத்திற்கு ப்ரார்த்திக்கப்பட்டு அந்த ஸ்வாமியும் ஸ்ரீமதஹோபில மடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை மங்களாசாஸனம் செய்தாயிற்று. இம்மாதிரியான பெரிய மஹான்கள் இப்படி ஒன்றுகூடி எழுந்தருளியிருந்த ஸேவையை அநேகர் பாக்யவசத்தினால் நேரில் கண்டு ஆநந்தித்தார்கள்.

*　　*　　*　　*　　*　　*　　*

ஸ்ரீமதழகியசிங்கரின் செல்வப்பிள்ளையின் மங்களாசாஸனமும் வித்வத்ஸதஸ்ஸும்

ஸ்ரீமதழகியசிங்கர் திருநாராயணபுரத்தில் எழுந்தருளி மைஸூர் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்ட முதல்தர மரியாதைகளுடன் ஞாயிற்றுக் கிழமை 6 – 12 – 53 முதல் மூன்று தினங்கள் முடிய விசேஷ கோலாஹலத்துடன் நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் திருநாராயணன், செல்வப்பிள்ளை யதுகிரிநாயகி முதலியவர்களை மங்களாசாஸனம் செய்தாயிற்று. 8 – 12 – 53 செவ்வாய் கிழமை பிற்பகலில் ஸ்ரீமதழகியசிங்கர் அவ்வூரில் மலைமேல் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ யோகந்ருஸிம்ஹனையும் மங்களாசாஸனம் செய்தாயிற்று. ஸ்ரீ மதழகியசிங்கரின் திருநக்ஷத்திரத்தையுத்தேசித்து பல

தூரதேசங்களிலிருந்து எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளும் இம்மாதிரிவைபவங்களைக்கண்டு ஆநந்தித்தனர்.

9 – 12 – 53 புதன்கிழமை ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்திரமும் மிகவும் விமர்சையாகக்கொண்டாடப்பட்டது. இதற்கு முன்னதாகவே ஐந்து தினங்கள் வேத, ப்ரபந்த, புராண பாராயணங்களும் விசேஷ ததீயாராதனமும் நடந்தன. ஸ்ரீஅத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்திர உத்ஸவத்திற்காக பாராயணத்தில் அந்வயித்த பண்டிதர்களுக்கெல்லாம் ஸம்பாவனையும் ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹித்தாயிற்று.

10–12 – 53 வியாழக்கிழமை முதல் மூன்று நாள் திருநாராயணபுரத்தில் ஒரு வித்வத் ஸதஸ்ஸையும் நடத்தி அதில் பங்கெடுத்துக்கொண்ட வித்வான்களுக்கும் ஸம்பாவனை அநுக்ரஹித்தாயிற்று நம் ஸ்ரீ அழகியசிங்கர்.

வைதிக மதத்திலும், தர்மாநுஷ்டானங்களிலும், வித்யையிலும் ஆர்வத்துடன் எழுந்தருளியிருப்பதினால் ஸ்ரீமதழகியசிங்கரும் எழுந்தருளும் இடங்களெல்லாம் வித்வத் ஸபை நடத்தி எல்லோரையும் பஹுமானித்து ஸந்தோஷிக்கும்படி அநுக்ரஹித்தாயிற்று. இம்மாதிரியே பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து நம் எல்லோரையும் ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹித்தருளும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கடாக்ஷித்தருளுவாராக என்று நாம் எல்லோரும் ப்ரார்த்திப்போமாக.

ஸ்ரீ:

மைஸூரில் ராஜோபசாரம்

21–11–53 உ காலை **7** மணிக்கு வங்கிமண்டபத்தில் ஸ்ரீமான்கள் K. T. பாஷ்யமய்யங்கார்(மேல்ஸபைத்தலைவர், முன்னாள் மந்த்ரி) M. சேஷாத்ரிஐயங்கார்(மைஸூர், ஹைத்ராபாத் மாஜி மந்த்ரி) T. S. ராஜகோபால ஐயங்கார் அட்வொகேட்(மேல்ஸபை மெம்பர்) நாராயணஸாமி, அட்வொகேட்(சட்டஸபை மெம்பர்) அனந்தாசார்யர், ரங்காசார்யர், மூன்று மதத்தைச் சேர்ந்த தாநாதிகாரிகள் முதலிய லௌகிக வைதிக பெரியோர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை தண்டன் ஸமர்ப்பிக்க குழுமி நின்றனர். ஸ்ரீ அழகியசிங்கரும் காலையில் (**8** மணிக்கு)கலியன் சாற்றுமுறையை முடித்துக்கொண்டு ஆஸநத்தில் எழுந்தருளியாயிற்று. பிறகு அடிபணிந்தவர்களை ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீகார்யம் ஸ்வாமி மூலமாக அறிந்து கொண்டார். இதற்குள், ஆராதகர் ஸ்வாமியும் ஸுமார் **15000** ரூபாய் செலவு செய்து புதிப்பிக்கப்பட்டு முதல் நாள் ராத்திரி கொண்டுவரப்பட்ட தங்கப் பல்லக்கில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணினர். உடனே ஸ்ரீ அழகியசிங்கரும் அங்கிருந்து புறப்பட்டு பஞ்சகலசங்கள் வைக்கப்பட்ட தந்தப் பல்லக்கிற்கு எழுந்தருளினர். அங்கு அரசரால் அனுப்பப்பட்ட உஸூர் ஸெகரட்ரி மஹாதேவஐயர் அஸிஸ்டெண்ட் ஸெகரட்ரி குருமூர்த்திசாஸ்த்ரிகள், அமுல்தார் முதலிய அதிகாரிகள்வந்திருந்தனர். முன்புபெருமாள் எழுந்தருள பின்பு ராஜ போகிகள் ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணினர்கள். மண்டபத்தின் முன் புறத்து கேட்டை அடைந்ததும், அரண்மனையிலுள்ளகோயில்களிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ சடாரி முதலிய மரியாதைகளைஸ்வீகரித்துக்கொண்டார். பிறகு அங்கு அணிவகுத்து நின்ற துருப்புக்களின் மரியாதையை கடாக்ஷித்தருளினர். யானை, குதிரைகள் முன்னும் பின்னும் செல்ல, பேண்ட், பேரி, பணவம், தாரை முதலிய வாத்யங்கள் முழங்க ச்வேதச்சத்ரங்களின் நடுவில் ஊர்வலமாக ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளினர். வேதம் வல்லார்கள் ஸ்வஸ்திவாசநம் முதலிய பாராயணம் பண்ணிவந்தார்கள். முனிஸிபல் எல்லையில் வளைவுகள் போடப்பட்டு அதில் **'स्वागतम्'** என்று எழுதப்பட்டிருந்தது. அவ்விடத்தை அடைந்ததும், முனிஸிபல் தலைவர், கௌன்ஸலர்கள், கமிஷனர் முதலியவர்கள் அனைவரும் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவடிகளில் புஷ்பமாலைகளை ஸமர்ப்பித்து வரவேற்றனர்.

'तावत्प्रकीर्णाभिनवोपचारमिन्द्रायुधद्योतिततोरणाङ्कम् । गुरुः स शिष्यैस्सह राजमार्गं प्राप ध्वजच्छाय निवारितोष्णम्' ॥ என்கிறபடி ராஜவீதி முழுதும் புதிய பொருள்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. வானவில் போன்ற நிறமும், உருவமுமுடைய வளைவுகள் வீதியில் அமைக்கப்பட்டிருந்தன. வீதிகள் தோறும் கட்டப்பட்டிருந்த கொடிகள் நல்ல நிழலைக்

கொடுத்து உஷ்ணமில்லாமற் செய்தன. அத்தகைய ராஜவீதியை ஸ்ரீ அழகியசிங்கர் சிஷ்யர்களுடன் அடைந்தார். **'प्रविश्य चैनं पुरमग्रयायी नीचैस्तथोपाचरदर्पितश्रीः'** என்றபடி அரசன், ராஜசின்னங்களான தனது குடை, சாமரங்கள் முதலிய பொருள்களை எல்லாம் உபயோகித்தும், வணக்கத்துடன் செல்லும் தனது பரிஜனங்களை எல்லாம் அனுப்பியும் வரவேற்று இவரை பட்டணத்துள் அழைத்துச் சென்றான். ஆங்காங்கு ஜனங்கள் கூட்டங்களாய் கூடியும், கூடவந்தும் ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்து தன்யரானார்கள்.

இவ்விதம் வீதிவலம் வந்து அரண்மனை கோட்டை வாசலைத் தாண்டி அரண்மனை வாசலை ஸ்ரீ அழகியசிங்கர் அடைந்தார். அங்கு தர்பார் பக்ஷி, உஸூர் ஸெகரட்ரி முதலிய அரசன் அந்தரங்கர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை அடிபணிந்து வரவேற்றனர். ஸ்ரீ அழகியசிங்கரும் பல்லக்கினின்றுமிறங்கி **'तस्याधिकारपुरुषैः प्रणतैः प्रदिष्टां प्राग्द्वारवेदिविनिवेशितपूर्णकुम्भां' रम्यां नवोपकार्यां गुरुरध्युवास ।** என்கிறபடி மஹாராஜாவின் அதிகாரிகள் மிகவணக்கத்துடன் காட்டிய புதிய மாளிகையில் சென்று தங்கினார். அரண்மனையின் அழகு வர்ணிக்க நிலமன்று. கல்யாண மண்டபத்தில் வெள்ளிமண்டபம் ஜோடித்து பெருமாளை எழுந்தருளப்பண்ணினார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் ஸரியாக பன்னிரண்டு மணிக்குமங்களஹாரத்திபண்ணியாயிற்று. அச்சமயம் ஸகல பரிஜனங்களுடனும் மஹாராஜா பெருமாள் ஸமீபம் வந்து ஸேவித்து க்ருதார்த்தரானார். ஸுமார் 100 வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் பெருமாளையாராதிக்கும் பாக்யத்தை இவ்வரசர் பெற்றார். ஸ்ரீ அழகியசிங்கரும் பெருமாள் ப்ரபாவத்தையும், இம்மடத்தின் மேன்மையையும் சுருக்கமாக நன்குஸாதித்தார். பிறகு தீர்த்தம் ஸ்ரீசடாரி முதலியவைகள் ஆனதும், ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனப்படி ஸ்ரீகார்யம் ஸ்வாமி மாலோலனின் மாலையை மன்னருக்குப்போட்டு மகிழ்வித்தார். அங்கிருந்து இரண்டடி சென்று ஆஸநத்திற்கு ஸமீபம் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியானதும், **'अथ राजा मुनिश्रेष्ठं कृताञ्जलिरभाषत । आसने भगवानास्तां'** என்றபடி ப்ரார்த்தித்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் ஆஸநத்தில் வீற்றிருந்தார். உடனே மஹாராஜாவும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் ஜோடி சால்வைகள், பட்டு, பாதகாணிக்கை, பழம் முதலியவைகள் ஸமர்ப்பித்து ஸாஷ்டாங்கமாக தெண்டம் ஸமர்ப்பித்து 'இன்றைய தினமே ஸுதினம், தங்கள் பாதஸ்பர்சத்தால் இன்று அரண்மனை புனிதமாயிற்று' என்று சொல்லி நின்றார். ஸ்ரீ அழகியசிங்கரும் அவரை வீற்றிருக்கும்படி நியமிக்க, அரசரும் பக்தி விநயத்துடன் உட்கார்ந்து கொண்டார். ஸ்ரீ அழகியசிங்கரும் **'पप्रच्छ कुशलं राज्ञः'** என்கிறபடி ராஜாவைகுசலப்ரச்னம் பண்ணினார். பிறகு ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனம் பெற்று ஸ்ரீகார்யம்ஸ்வாமி ராஜகுடும்பத்திற்கு வாங்கிய சால்வை, பட்டுமுதலியவற்றை மஹாராஜாவிடம் கொடுத்தார். ஸ்ரீ அழகியசிங்கர்— ராஜாக்கள் திக்பாலர்களுடைய அம்சமென்று சாஸ்த்ரத்தில் கூறப்பட்டிருக்கிறது என்றும், அவர்கள் தர்மத்தை ஸரிவர பாதுகாக்கவேணுமென்றும், இந்த கர்நாடக ஸமஸ்த்தானாதிபதிகள் எல்லோரும்தர்மிஷ்டர்களாய் ராஜ்யபரிபாலனம் பண்ணிவந்திருப்பதை சரித்ரமூலமாய் அறிகிறோம் என்றும், கர்நாடக தேசாதிபதியாய் இருப்பதுடன் கர்நாடக (பழய) ஆசாரங்களை விடாமல் நீங்கள் நடந்துகொள்ள வேண்டியது' என்றும் ஸாதித்தாயிற்று. அதற்கு அரசர் 'ஸ்வாமிகளுடைய ஆசீர்வாதம்தான்' என்று சொன்னார். பிறகு மஹாராஜா மஹாராணி அவர்களின் பிள்ளை, ராஜாவின் தாயார் இவர்களுடன் ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து, உபஹாராதிகள் ஸமர்ப்பித்து பெருமாளையும் ஸேவித்துவிட்டு மறுபடியும் ஸ்ரீ அழகியசிங்கரை ஸாஷ்டாங்கமாக தெண்டன் ஸமர்ப்பித்து பலமந்த்ராக்ஷதைகள் பெற்றுக்கொண்டுநியமனம்பெற்று அந்தப்புரத்திற்குச்சென்றனர். ஸ்ரீ அழகியசிங்கரும் மற்றுமுள்ள அரண்மனை அதிகாரிகளுக்கு பூர்ணபலம் மந்த்ராக்ஷதை முதலியதை அனுக்ரஹித்துவிட்டு பெருமாளையெழுந்தருளப்பண்ணிக்கொண்டு அரண்மனைக்கு பச்சிம பாகத்திலுள்ள ச்வேதவராஹன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அவ்விடத்தில் இரண்டுதினங்கள் மஹாராஜா பெருமாளை ஆராதித்தார். திங்கட்கிழமை காலையில் மடமேற எழுந்தருளினார். அப்பொழுதும் ஸகல பரிஜந பரிச்சதங்களையும் கொண்டு மடத்திற்கொண்டுவிட்டார் மஹாராஜா. இவ்விதம் மைஸூரில் ராஜோபசாரம் மிகவும் நன்றாக நடந்தது

ஸ்ரீ:

ஆழ்வாராசார்யர்களின் அவதாரம்

திருமங்கையாழ்வார்,

ஐப்பசி மாதத்தில் திருவவதரித்த மஹா நீயர்களைப்பற்றி தெரிந்து கொண்டோம். இனி கார்த்திகைமாதத்தில் திருவவதரித்தவர்களைப் பற்றி சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

திருமங்கையாழ்வார் திருவாலி என்னும் திவ்ய தேசத்திற்கு அருகாமையிலுள்ள திருக்குறையலூரில் ஒரு கார்த்திகை மாதத்தில் க்ருத்திகை நக்ஷத்திரத்தில் திருவவதரித்தருளினார். ஆழ்வார்களுக்குள் கடைசீ இவரே. ஆகையால் நமக்கெல்லாம் நெருங்கியவர் இவர். இவருக்கு கலியன் என்றும், திருமங்கை மன்னன் என்றும், பரகாலன் என்றும், வயலாலி வளநாடன் என்றும், மங்கையர் கோன் என்றும் இப்படி பல பெயர்கள் உண்டு. இவர் ஒரு சிற்றரசராய் விளங்கினார். பால்யத்தில் அதிகமாக சிற்றின்பங்களில் ஈடுபட்டு காலம் கழித்து வந்தார். இப்படி இருப்பினும் விஷ்ணுவின் திருவடிகளில் பக்தி உண்டு இவருக்கு. இவர் குமுதவல்லி என்னும் கன்னிகையை மணந்து பின் அவளிஷ்டப்படி பரம வைஷ்ணவராகி வைஷ்ணவர்களுக்கு அநேக திரவியங்களைக் கொண்டு ப்ரதி தினம் நித்ய ததீயாராதனங்களை நடத்திவந்தார். ததீயாராதனத்திற்குவேண்டிய திரவியமானது குறைந்த போது தாம் தம்முடைய அரசனுக்கு கப்பமாக செலுத்தவேண்டிய திரவியங்களை எல்லாம் எடுத்து செலவழித்து விட்டார். பிறகு அவ்வரசனால் கப்பப்பணத்திற்காக பீடிக்கப்பட்ட போது பேரருளாளன் பெரிய நிதியொன்றை வேகவதியில் இவருக்குக்காட்ட அதைக்கொண்டு அரசனுக்குச் செலுத்தவேண்டிய கப்பத்தை செலுத்தி மீண்டும் ஸ்ரீவைஷ்ணவர்களின் ததீயாராதனத்தை விடாது நடத்திவந்தார். தமக்கு மஹோபகாரம் பண்ணிய பேரருளாளனிடத்து அப்போதே பரமபக்தி ஏற்பட்டு விட்டதிவருக்கு.

இந்த கைங்கர்யத்திற்கு திரவியம் மீளவும் குறைந்தவாறே கைங்கர்யத்திலிருக்கும்படியான ஊற்றத்தால் வழிபறித்தாவது கைங்கர்யத்தை நிறுத்தாமல் நடத்தவேண்டுமென்று எண்ணி அச்செயலைமேற்கொண்டு அப்படியே வழிபறித்த பொருள்களைக் கொண்டு கைங்கர்யத்தை நடத்திவந்தார். ஸர்வேச்வரன் தன்னடியார் திறத்துள்ள ஆழ்வாரின் பக்தியை மெச்சி ஆழ்வாரை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றித்தானும் பிராட்டியுமாக ஓர் மணக்கோலம் பூண்டு தம்பதிகளாக ஆழ்வார் வழிபறிக்குமிடத்தில் வந்தார்கள். ஸர்வேச்வரன் எவனை வரிக்க ஸங்கல்பிக்கிறானோ அவனுக்கு தன்னைத்தானே காட்டிக் கொடுக்கிறான் என்கிறது ஒரு உபநிஷத். ஜகத்திற்கெல்லாம் காரணபூதமாகவுள்ள ஒரு திவ்ய தம்பதிகள ஆழ்வாரின் பக்தியைமெச்சி ஆழ்வாரை அநுக்ரஹிக்கத்தங்களைத்தாங்களே காட்டிக்கொடுக்கிறார்களிப்போது. அதுவும் எல்லோரும் ஈடுபடக் கூடிய திவ்யமங்கள விக்ரஹ சோபையைக்காட்டி ஆழ்வாரை வசீகரிக்கத்திருவுள்ளம் பற்றினான் ஸர்வேச்வரன். ப்ராக்ருதமான அழகுள்ள வஸ்துக்களின் சிற்றின்பத்தில் ஈடுபட்டு விழுந்த ஆழ்வாரை அப்ராக்ருதமான அழகைக்காட்டியே திருத்தவேண்டும் என்று திருவுள்ளம் போலும். ஆழ்வார் இந்த தம்பதிகளைக் கண்டதும் பரம ஸந்தோஷயுக்தராய் 'நமக்கு இனி குறையில்லை, இவர்களிடமுள்ள திருவாபரணங்களை அபகரித்தால் ஸ்ரீவைஷ்ணவர்களின் நித்யததீயாராதனம் குறைவின்றி வெகு நாளைக்கு நடக்கும்' என்று எண்ணி அவர்களை வழி மடக்கி 'நில்லுங்கள்' என்று அதட்டி அவர்களிடத்திலுள்ள ஸர்வாபரணங்களையும் கழட்டி வாங்கி மூட்டையாக கீழே கட்டிவைத்து அந்த மூட்டையை எடுக்கப்போமளவில் அது அசையாது கனக்க ஆழ்வார் மிகவும் சீறி 'இந்த மூட்டை கனக்கும்படி ஏதோ மந்திரம் செய்தாய்; அந்த மந்திரத்தை உபதேசித்தால் உன்னை விடுவேன். இல்லாவிடில் இந்தவாளால் உன் தலையை வீழ்த்துவேன்' என்று சொல்லி வாளை வீசப்போக அப்போது பெருமாள் ஆழ்வாரை கிட்ட வரவழைத்து அவருடைய வலது திருக்காதுகளில் மிகவும் சீரியதான திருமந்த்ரத்தை உபதேசித்தார். உடனே ஆழ்வார் அஞ்ஞானம்

நீங்கப் பெற்று ஞானத்தைப் பெற்ருர். எம்
பெருமானும் பிராட்டியுடன் அப்போது ஸே
வை ஸாதித்தான். ஆழ்வார் தான் இது கா
றும் பண்ணிப் போந்த மஹாபாபங்களை நினை
த்து உருகி கதறுகிருர். இங்குதான் இவரு
டைய முதல் ப்ரபந்தமாகிய பெரியதிருமொழி
அவதரிக்கிறது. மோக்ஷத்தில் ருசி பிறக்க
ஸம்ஸாரத்தின் தோஷங்களும், ப்ராப்யத்தின்
வைலக்ஷண்யமும் மனத்தில்படவேண்டும். இவ
ருடைய பெரிய திருமொழியை ஒருவன் அத்
யயனம் பண்ணிஞைகில் ஸம்ஸாரத்தின் தோ
ஷங்கள் நன்கு மனத்தில்பட்டு அதன் அடிச்
சூட்டால் மோக்ஷத்தையடைய த்வரிப்பதோடு
ப்ராப்யத்தின் வைலக்ஷண்யமும் மனத்தில்
நன்கு படும். இத்தைக்கணிசித்துத்தான் ஸ்ரீ
தேசிகனும் இதற்கு 'அறிவு தரும் பெரிய திரு
மொழி' என்று விசேஷணமிட்டார். இவர்
அருளிச் செய்த ப்ரபந்தங்கள் ஆறு. 1084
பாசுரங்கள்கொண்ட பெரிய திருமொழி முதல்
ப்ரபந்தம். 20 பாக்களாலாகியது இரண்டா
வது ப்ரபந்தமாகிய திருக்குறுந்தாண்டகம்.
30 பாசுரங்களால் அமைந்தது திருநெடுந்தா
ண்டகம் என்னும் மூன்ருவது ப்ரபந்தம். ஒரே
பாவிஞலாகியது திருவெழுக் கூற்றிருக்கை
என்னும் நான்காவது ப்ரபந்தம். ஐந்து, ஆரு
வது ப்ரபந்தங்களாகிய சிறிய திருமடலும்
பெரிய திருமடலும் முறையே 40 பாசுரங்களா
லும், 78 பாசுரங்களாலும் ஆகியது. இவர்
ப்ரபந்தங்கள் நான்கு 'வேதஸாரமாகிய நம்மாழ்
வாரின் திவ்ய ப்ரபந்தங்களுக்கு ஆறங்கம் கூற
வந்தவை என்று பெரியோர் பணிப்பர். இவர்
ப்ரபந்தங்களின் அர்த்தத்தில் இழியவேவேண்
டாம். சப்தத்திலிழிந்தாலே கண கணவென்று
ஒலிக்கும். இவர் கவித்திறமை நன்கு எற்படும்
இவைகளிலிருந்து. ஸர்வேச்வரஞல் மயர் வற
மதிநல மருளப்பட்ட மற்றைய ஆழ்வார்களின்
ப்ரபந்தங்கள் போலில்லாமல் இவர் ஸர்வேச்வர
னிடத்து தம்முடையவாள் வலிமையால் மந்தி
ரம் கொண்டமையால் அந்த பெருமிடுக்குத்
தோற்ற அமைந்துள்ளது இவர் ப்ரபந்தங்கள்.
இவருடைய ப்ரபந்தங்சள் மட்டும் அல்ல;
இவருடைய ஸ்வபாவமும் மற்றைய ஆழ்வார்
களைக் காட்டிலும் விலக்ஷணம் என்பதை இவர்
தாமே திருவெந்தஞர் எம்பெருமான் விஷய
மாக அருளப்பட்ட திருமொழியில் ஸாதித்
துள்ளார்.

இவர் ப்ரபந்தங்களுக்குள் சிறந்த ப்ரபந்தம்
திருநெடுந்தாண்டகம் என்னக் குறையில்லை.
அந்த ப்ரபந்தத்தை ஸேவிக்க ஸேவிக்க ஆராத
அமுதமாக விருக்கும். திருநெடுந்தாண்டகம்
கற்றவன் என்று பட்டர் பிருது கூறிக்கொண்
டார் என்பது ஸுப்ரஸித்தமிறே. ஸ்ரீஸ்வாமி
தேசிகனும் 'குலா நெடுந்தாண்டகம்' என்று
அருளிச் செய்தார் ப்ரபந்தஸாரத்தில். திருப்
பாவையைப்போல் எல்லோரும் திருநெடுந்
தாண்டகம் முப்பதுபாசுரத்தையும் தப்பாமல்
அநுஸந்தித்து உய்யவேண்டுமென்பது எளிய
னின் ப்ரார்த்தனை.

இவர் ப்ரபந்தங்களின் முக்ய நோக்கு அர்
ச்சாவதார அநுபவம்தான், ஒவ்வொரு திவ்
யதேசங்களுக்கும் சென்று அங்கே கோயில்
கொண்டிருக்கும் எம்பெருமான்களை மங்களா
சாஸநம் செய்வது இவர் ரீதி. 'எரார் முயல்
விட்டுக் காக்கைப் பின் போவதே' என்கிற
படி இவ்வாசார்யானுபவம் தவிர பரமபதமும்
வேண்டாம் என்று அறுதியிடுமது இவர் ஸ்வ
பாவம், இக்காலத்துள்ளவர்களுக்கு தஞ்சமா
கிய அர்ச்சாவதாரத்தின் சீர்மையை எடுத்
துக் காட்டவேண்டியது ஆழ்வார்களில் கடை
சியில் அவதரித்தவராகிய தம்முடைய கடமை
என்று நினைத்து அர்ச்சாவதார அநுபவத்தி
லிழிந்தார் போலும்.

'परावरसुखग्राह्यं प्रेमबोधप्रसावकं
स्वरूपात् स्वामिनो रूपं उपादेयतमं विदुः' ॥

என்கிறபடி எம்பெருமானின் திவ்யாத்ம ஸ்வ
ரூபத்தைக் காட்டிலும் திவ்ய மங்கள விக்ரஹத்
தில் இவருக்கு அதிக ஊற்றமாகையால் இவரை
தேஹாத்மவாதிகளில் சேர்ந்தவரென்று ஆசார்
யர்கள் அருளிச் செய்வர். அவ்வர்ச்சைகளி
லும் நம் பேரருளாளன் திருமேனியில் அதிக
நோக்கு என்பது இவருடைய ப்ரபந்தங்களை
ஸேவித்தால் நன்கு புலப்படும். கல்லுயர்ந்த
நெடுமதிள் சூழ்ந்த கச்சியில் மேயும் களிறை
(அருளாளனை) ஆழ்வார் பிராட்டி தசையை
அடைந்து நிற்கும்போது, தன்னுடைய பொ
ன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக்கொண்டு
அக்களிறு வெளியே போகாதபடி பண்ணி

(தொடரும்)

ஸ்ரீ:

திருப்பாவைக்கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

சகுனம் என்கிறோம். சகுனம் என்ற சொல்லுக்குப் பக்ஷி என்பதே முக்யப் பொருள். இது வலமாகப் போவதும் இடமாகப் போவதும் சப்திப்பதுமாகிற இவையே பெரும்பாலும் அவ்விதக்குறிகளாக இருப்பதால் பொதுவாக எல்லாவற்றுக்குமே சகுனம் என்ற வ்யவஹாரம் உண்டாயிற்று. மனிதர்களுக்கு சுபாசுபங்கள் உண்டாவதற்கு முன் இவ்வித அறிகுறிகள் அவச்யம் காணப்படு மென்று ராவணனால் அடிக்கப்பட்டு வீழ்ந்த ஜடாயுவைக்கட்டிக்கொண்டு மிகப் பரிதாபமாகப் புலம்பிய ஸீதை சொல்லுகின்றாள்—

'निमित्तं लक्षणज्ञानं शकुनिस्वरदर्शनम् ।
अवश्यं सुख दुःखेषु नराणां प्रति दृश्यते ॥
नूनं राम न जानासि महद्व्यसनमात्मनः ।
धावन्ति नूनं काकुत्स्थं मदर्थं मृगपक्षिणः ॥'

இப்படி அவ்வப்போது ஏற்படும் அறிகுறிகளாவதன்றி விடியற்காலத்தில் தவறாது விழித்து இனிய சப்தம் செய்து 'விடியப் போகின்றது, விழித்துக்கொண்டு கடமையைச்செய்யுங்கள்' என்று காலத்தை யறிவித்து எழுப்புவதாலும் பக்ஷிகள் மனிதனுக்குச் சிறந்த உபகாரத்தைச் செய்கின்றன. சாந்தோக்ய உபநிஷத்தில் (3. 19) ஸூர்யனை ப்ரஹ்மமாக உபாஸிக்க வேண்டும் என்ற இந்த வித்யையை விதிக்குமிடத்தில் 'ஸ்ருஷ்டி காலத்தில் உலக அண்டம் பிளந்து அதிலிருந்து ஸூர்யன் உண்டானான். அப்போது பெருத்த கோஷங்கள் உண்டாயின. ஆகையால் இப்போதும் ஸூர்யன் உதிக்கும் போதும், அஸ்தமிக்கும் போதும் பக்ஷி முதலியவற்றின் பெருங்கோஷங்கள் உண்டாகின்றன. இதை அறிந்து ஸூர்யனை ப்ரஹ்மமாக உபாஸிப்பவர் எவரோ அவரைப் பற்றி நல்லகோஷங்கள் உண்டாகி அவரை ஸுகப்படுத்தும்' என்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்துதி பாடகர்கள் மஹாராஜாக்களைப் பள்ளி எழுப்புவது போல் பக்ஷிகள் ஆதித்ய மண்டலத்தின் அந்தர்யாமியான எம்பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுவதாக ஓர் கருத்து இங்கே தோன்றுகிறது. ஸூர்யரூபனான எம்பெருமான் ஜனங்களை எழுப்பி அவரவர்களின் காரியங்களில் ப்ரவ்ருத்திப்பிக்கிறான்' என்று ஒரு ச்ருதிவாக்யம் கூறுகின்றது. ஆகையால் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தை யநுஸரித்து அவனுக்குச் சேஷமான பக்ஷிகளும் தமது இனிய சப்தங்களால் ஜனங்களை எழுப்பி எம்பெருமானுக்கே கைங்கர்யம் செய்கின்றன என்பதும் உண்மை.

எம்பெருமான் ஈ எறும்பு முதல் ஸர்வத்திற்கும் அந்தர்யாமி யாகையாலும், அவன் அசையாமல் அணுவும் அசையாதாகையாலும் காலையில் பக்ஷிரூபத்தில் சப்திப்பது அவனே என்பது தத்வஜ்ஞருக்குத் தோன்றாமல் இருக்க முடியாது. ஆகவே இதெல்லாம் பக்ஷி சப்தத்தைக் கேட்டவுடனே அந்த நாயகப் பெண்ணின் புத்தியில் தோன்றிற்று. மறுக்ஷணத்தில் அவ்வூரிலுள்ள ஒரு கோயிலில் கைங்கர்யபரர்கள் வருவதற்காகஊதப்பட்டசங்குஓசைக் கேட்டது. உடனே இப்பெண் அக்கோயிலையும், சங்கையும் தனது மனக்கண்ணால் தத்ரூபமாகப் பார்த்தாள். பக்ஷிகள் எல்லாம் பகவானுடைய விபூதி யென்பதை எண்ணிக் கொண்டிருந்த அவளுக்குப் பக்ஷிராஜனான கருடனுடைய பிம்பங்கள் மதிள்களின் மேல் மூலைகளிலும், நடுவிலும் ப்ரகாசிக்க அதனால் மிகவும் விளங்கிய பகவத் ஸன்னிதி மனக்கண் முன் காட்சியளித்தது. சங்கும் வெள்ளை வெளே ரென்று ப்ரகாசித்தது. இவ்வநுபவங்கள் மனத்தில் நடந்து கொண்டிருக்க இந்தக் கோபகுமாரி அவ்வீட்டுப் பெண்ணை எழுப்புதற்காக தாளிடப்பட்டிருந்த அவ்வீட்டின் வாசற்படி யருகே சென்று தன் அநுபவத்தை வெளிப்படுத்தும் சொற்களையே சொல்லி அவ்வீட்டுப் பெண்ணை எழுப்பினாள்.

'புள்ளும் சிலம்பின காண் புள்ளரையின்
கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம்
கேட்டிலையோ பிள்ளாய் யெழுந்திராய்'

என்று. 'கருதியவ்ரதத்தை அநுஷ்டிப்பதற்காக நாம் வெகு ஜாக்ரதையாய், பக்ஷிகள்

விழித்து சப்திப்பதற்கு முன்னமேயே எழ வேண்டும். இப்போது அவைகளும் உறக்கம் நீங்கிக் கூவுகின்றன. இன்னமும் நீ எழாமலிருப்பதா. பெண்ணே எழுந்திரு. பக்ஷிகளின் சப்தம் அவ்வளவு உரத்ததாக இல்லையாயினும் சங்கின் பேரோசையைக் கூடவா நீ கேட்கவில்லை. ஊரில் தம் தம் க்ருஹங்களிலிருக்கும் பகவத்கைங்கர்யபரர்கள் எல்லோரும் கேட்டு விழித்து எழுந்து வருவதற்காக வெகு கெட்டியாக வன்றோ அது ஊதப்படுகின்றது. அதைக்கூட கேட்கமுடியாமலா நீ இன்னம் தூங்குகின்றாய்? எழுந்திரு' என்றாள்.

முன்ராத்திரி தோழிகளின் கூட்டம்கலைந்து வீடு திரும்பிய அப்பெண் காலையில் சீக்கிரம் எழுந்திருக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் த்வரையாகவே படுத்துக்கொண்டாள். ஆகிலும் நோன்பு, ஸ்ரீக்ருஷ்ணன், தோழிகள், இவர்களைப்பற்றிய பல எண்ணங்கள் மேன்மேலும் உண்டாகி இவளை உடனே தூங்கமுடியாமற் செய்துவிட்டன. சில நாழிகள் சென்ற பிறகு அயர்ந்து தூங்கினவள் சங்குஓசைகேட்ட பொழுதே விழித்து 'ஐயோ நாழியாகிவிட்டதே' என்று அலண்டு எழுந்திருந்து பரபரப்போடு முகத்தைத்துடைத்துக்கொண்டு விரைந்து வாசற் கதவினருகே வந்தாள். கதவின் அருகே உள் பக்கம் இவள் வருவதும் வெளிப்பக்கத்தில் தோழி வந்து கூப்பிடுவதும் ஒரே ஸமயமாயிருந்தது. மறு க்ஷணம் தாப்பாளை நீக்கிக் கதவைத்திறந்து வெளியே வந்த அவ்வீட்டுப் பெண் மிகுந்த அன்போடு தன்னை வரவேற்ற உத்தமத் தோழியின் கையைப்பற்றி அவளுடன் நடந்து வீதியில் நின்ற கோஷ்டியில் சேர்ந்தாள். அதில் சிலர் அவள் இதுவரை தூங்கியதையும் தங்களைக்காக்க வைத்ததையும் பற்றி அவளைப்பார்த்துப் புன்னகை செய்து ஏளனம் செய்ய ஆரம்பித்தார்கள். அதையறிந்த நாயகப்பெண் அவர்கள் அவ்விஷயத்தை அறவே மறந்து வேறுவிஷயத்தில் தமது கவனத்தைச் செலுத்தும்படிச் செய்ய என்ன வழி என்பதை ஆலோசித்தாள். அதே க்ஷணத்தில் அக்கம் பக்கத்துத் திருமாளிகைகளிலிருந்து **'हरिर्हरिः हरिर्हरिः'** என்று அடுத்தடுத்து மதுரமாகவும், கம்பீரமாகவும் செய்யப்படும் பகவந்நாமஸங்கீர்த்தந த்வநி காதில் விழுந்தது. உடனே வெகு ஸமர்த்தையான இந்தக் கோபகுமாரி அப்போது அவ்வித நாம ஸங்கீர்த்தனம் செய்யும் பெரியோர்களுடைய பெருமையையும் அவர்களுடைய உள்ளத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் உள்ளவாறு ப்ரத்யக்ஷம் போல் விசதமாக வறிந்து மிகவும் போக்யமாக இருந்தமையால் அவற்றையே விவரமாகப் பேசி அங்குள்ள எல்லோரையும் அந்த ஆநந்தாநுபவத்தில் ஈடுபடும்படிக் கேட்டுக்கொண்டாள். அவள் பேசியதாவது — 'ஜ்ஞாநயோகத்தையும், அதற்குப்பலமான பக்தி யோகத்தையும், அநுஷ்டித்து அதனால் 'முனிவர்' என்று பேர் பெற்றவர்களும், கர்மயோகத்தையநுஷ்டித்து அதனால் 'யோகிகள்' என்ற பேர்பெற்றவர்களுமான பல பல பெரியோர்கள் நமது ஊரில் திகழ்கின்றனரன்றோ. அவர்கள் இப்போது எழுந்திருந்து வழக்கப்படி ப்ராதக்காலத்தில் செய்யவேண்டிய பகவந் நாம ஸங்கீர்த்தனத்தைச் செய்கின்றார்கள். நாம் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தால் **"हरिर्हरिः हरिर्हरिः'** என்ற இது முதலான அந்த நாமங்களுடைய த்வநி நமது சரீரத்திற்குள் புகுந்து நமது மனத்தைக் குளிரச் செய்யும். பரமாநந்தமாயிருக்கும். (**निविश्य कर्णविवरं हरतोङ्गतापम्.**)ஸர்வ பாபங்களையும் போக்குகின்றானாகையாலே **'हरिः'** என்றபெயர் பகவானுக்கு ஏற்பட்டிருக்கிறது. பாபமெல்லாம் கழிந்தால் ஸ்வபாவமாக நமக்குள்ள பரமாநந்தம் தானே ஆவிர்பவிக்கும். ஆகையால் உத்தமோத்தம புருஷார்த்தம் வரையிலுள்ள ஸகல க்ஷேமங்களையும் நமக்குத் தருவனென்றும், அதற்குரிய ஸகல கல்யாணகுணங்களையுடையவனென்றும் அறிவித்து எம்பெருமானுடைய அநுபவ விசேஷத்தை உண்டாக்குகின்றனவன்றோ இந்த நாமங்கள். ஆகையால் நாமெல்லோரும் ஸாவதானமாய் இவற்றைக் கேட்போம். எம்பெருமானுடைய திருநாமங்களைப்பாமரர் உச்சரித்தாலும் நம் போன்றவர்களுக்கு அவை பரமபோக்யங்களே. ஆகிலும் இப்பெரியோர்களின் திருவாக்கிலிருந்து வரும் பகவந்நாமங்களுக்குத்தனிப்பட்ட ஒரு சிறப்பு இருக்கின்றது. இவை பகவத்பக்தியினால் கனிந்த அவர்களுடைய நெஞ்சிலிருந்து பாவசமாய் வெளிவருகின்றனவாகையால் மிகுந்த விசேஷம் வாய்ந்தவை. இப்பெரியோர்கள் ராத்திரி படுக்கப்போகும் போது பரிசுத்

தர்களாக உட்கார்ந்து ப்ராணாயாமம் செய்து யோகத்தை ஸங்கல்பித்துக்கொண்டு எம்பெருமானுடைய திவ்யரூபத்தை

क्षीरसागरतरङ्गशीकरासारतारकितचारुमूर्तये ।
भोगिभोगशयनीयशायिने माधवाय मधुविद्विषे नमः॥

என்கிறபடியே ஹ்ருதயத்தில் பதியவைத்து த்யானிப்பார்கள். தூக்கம் வரும்ஸமயத்தில் அந்த த்யானம் சிறிதும் தடைபடாமல் அப்படியே மெதுவாகப் படுத்துக்கொள்வார்கள். மறுபடி விடியற்காலையில் விழித்த முதல் க்ஷணத்திலேயே முன் ராத்திரி அநுஸந்தித்த அதே பகவத்ரூபம் அவர்களுடைய உள்ளத்தில் தோன்றும். அது மாறாமல் அப்படியே அநுவர்த்திப்பதற்காக மெள்ளவெழுந்து உட்கார்ந்து கேட்போரும் களிக்கும்படி அழகான முறையில் நாம ஸங்கிர்த்தனம் செய்வார்கள். ஆகையால் இது அவ்வளவுசிறப்புப்பெற்றது.' என்பது.

இப்படி முனிவர்களும் யோகிகளும் உள்ளத்தில் கொள்வதாகக் கூறப்பட்ட எம்பெருமானை இப்பெண் பூதனையைக்கொன்றவனாகவும், சகடாஸுரனை ஸம்ஹரித்தவனாகவும், பாற்கடலில் துயிலமர்ந்தவனாகவும், ஜகத்காரணனாகவும் அநுஸந்தித்தாள். க்ருஷ்ணாவதார திவ்ய சரிதத்தைப்பேசுவது ப்ரக்ருதத்தில் உத்தேச்யமாகையால் பால்யத்தில் சத்ரு நிரஸநார்த்தமாக அவன் செய்த இரண்டு திவ்ய லீலைகளைப் பேசினாள். பிறகு ஆச்ரிதர்கள் சயனிக்கும் போது த்யானிக்கும் ரூபமாகையால் க்ஷீராப்தி சயநத்தைக் கூறினாள். தூங்கும் பொழுது ஸர்வஜீவன்களும் ஸர்வகாரணனான எம்பெருமானிடம் போய்ச் சேர்ந்து அவன் மீதே தங்குகின்றன. இது உபநிஷத்துக்களிலும் ப்ரஹ்மஸூத்ரத்திலும் நிரூபிக்கப்பட்ட விஷயம். விழித்திருக்கும்போது பலப்ரவ்ருத்திகளைச் செய்து களைப்படைந்த ஜீவன்களை நித்ராகாலத்தில் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டு பரமதயாளுவான பகவான் களைப்பாற்றுகிறானென்று சாஸ்த்ரங்கள் அவனுடைய கல்யாணகுண விசேஷத்தைக் குறிக்கின்றன. அதையெல்லாம் நினைத்து 'வித்து' என்று ஸர்வஜகத்துக்கும் உபாதாந காரணனாகப் பேசினாள்.

இப்படிப் பரமாத்புதமாகப் பேசி தனது தோழிகள் எல்லோரையும் பெரியோர்கள் செய்த பகவந்நாம ஸங்கீர்த்தனத்தில் ரஸாநுபவம் பண்ணும்படி செய்து அவர்களுடன் புறப்பட்டு மேலே சென்றாள்.

7. கீசு கீசு.

விடியற்காலையில் கண்விழித்துப் பெரியோர்கள் பக்தி பரவசர்களாய்ச் செய்யும் பகவந்நாம ஸங்கீர்த்தனத்தின் இனிய ஓசையைக் கேட்டுக் கொண்டே நடந்து வந்த கோபகுமாரிகளின் கோஷ்டி மற்றொரு வீட்டிலுள்ள பெண் இன்னும் தங்களுடன் வந்து சேரவில்லை என்பதை யறிந்து அவ்வீட்டின் எதிரே வந்து நின்றது. அப்போது அங்குள்ள மரங்களில் வஸிக்கின்ற பக்ஷிகள் மதுரமாக சப்தித்தன. திருமாளிகைகளுக்குள் ஸ்த்ரீகள் தயிர் கடையும் சப்தமும் காதில் விழுந்தது. இவ்விரண்டையும் வர்ணித்து ப்ரதான கோபகுமாரி அவ்வீட்டுப் பெண்ணை எழுப்புகிறாள்.

'ஆனைச்சாத்தம் என்கிற பாரத்வாஜபக்ஷிகள் ஒன்றுக்கொன்று நேசித்து இன்பமயமாகக்கலந்து கீசு கீசென்று பேசுகின்றனவே. அந்த சப்தத்தைக் கேட்காமலா நீ தூங்கிக் கொண்டிருக்கின்றாய்? இது எவ்வளவு வருந்த வேண்டிய விஷயம். கீசு கீசு என்கிற தொனியைத்தான் அவை செய்கின்றன. ஆகிலும் அது மனிதர் பேசும் பேச்சுப்போலவே இருக்கின்றது. மனிதர்பேசும்போது அப்பேச்சினால் அவர்களுடைய உள்ளத்திலுள்ள கருத்து எவ்வளவு ஸ்பஷ்டமாக விளங்குகின்றதோ அவ்வளவு ஸ்பஷ்டமாக இப்பக்ஷிகள்செய்யும் தொனியினால் அவற்றின் உள்ளத்திலுள்ள கருத்து விளங்குகின்றது. 'என் அருமைக்காதலியே, என் கண்ணே, என் உயிரே, நான் எவ்வளவோ தவம் செய்திருக்கின்றேன். அதனாலேயே உன்னோடு கூடி வாழும் பேரானந்தத்தைப்பெற்றிருக்கின்றேன். இப்படி நம்மைக் கூட்டி வைத்த ஸர்வேச்வரனுக்குப் பல்லாண்டு பாடுவோமாக. இனி எத்தனைப் பிறவி பிறந்தாலும் நாம் இப்படியே கூடி வாழவேண்டும். அப்படி எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் புரியவேண்டும்.' என்றிப்படி ஆண்பக்ஷி பெண்பக்ஷியைக் குறித்தும் அதற்குத் தக்கபடி பெண்பக்ஷி ஆண்பக்ஷியைக்

குறித்தும் தனது மனோபாவத்தை வெளியிட்டுக் கொஞ்சிக்குலாவுவது இத்தொனியிலிருந்து விசதமாக நமக்குத் தெரிகிறதன்றோ? ‘ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி’ என்றும் ‘ச்ருத்வா நஸ்ஸு கர்ணாய வதிஃ ப்ரியோ பவதி’ என்றும் உபநிஷத்துக்கள் உபதேசிக்கின்றபடி ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பவிசேஷத்தினாலே நிஷ்கல்மஷமான இன்பத்தை அநுபவித்து இப்பக்ஷிகள் உண்டாக்கும் மதுரமான சப்தம் மூலகாரணபூதனும் ஆநந்தமயனுமான அப் பரம புருஷனை ஸ்மரிப்பித்து கேட்போர் மனக் கண் முன்னே அவனைத் தோற்றுவிக்கிறதன்றோ? இந்த இனிய சப்தம் உண்டாகும் போது இதைக் கேட்காமல் தூங்குவார் இவ்வுலகினில் இருப்பாரோ? அப்படி சிலர் இருப்பாராகில் அவர்களைப் பேய் பிடித்துப் பரவசராக்கியிருக்கிறதென்றே கொள்ளவேண்டும். நீ இப்போது இந்த சப்தம் உண்டாகியிருக்க உடனே விழித்தெழுந்திருந்து அதைக் கேட்காமல் தூங்குகின்றமையால் பேய்ப் பெண்ணாகத்தானிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இது தகாது. பெண்ணே உடனே எழுந்திரு.’ என்றிப்படி பாரத்வாஜ பக்ஷியின் சப்தத்தை வர்ணித்து எழுப்பினாள். ஆனால் அந்தப் பெண் எழுந்திருக்கவில்லை. அப்போது வீட்டுக்குள் ஸ்த்ரீகள் தயிர் கடையும் சப்தம் கேட்டது. ஆகவே பிறகு அதை வர்ணித்து எழுப்புகின்றாள். இடைச்சிகள் தயிர் கடைந்து எடுக்கும் வெண்ணெயெல்லாம் பலாத்காரமாகவாவது ஸ்ரீக்ருஷ்ணன் அமுது செய்து உகக்கும் வஸ்து. ஆகையால் தயிர் கடையும் இடைச்சிகள் எல்லோரும் ஸ்ரீக்ருஷ்ணன் உகக்கும் உத்தம கைங்கர்யம் செய்பவர்கள் என்று எப்பொழுதும் கருதியிருக்கின்றவள் இந்த ப்ரதான கோபகுமாரி. அதனால் அவள் அப்போதுள்ள அவர்களுடைய நிலையை உள்ளபடி மநத்தில் பாவித்து அநுபவித்தாள். எதிரே பெரும் பானையில் நிரம்பத் தயிர். அதில் பெரும் மத்து. அதன் நடுவில் சுற்றிய சயிற்றின் இரண்டு நுனிகளையும் இரண்டு கைகளால் பற்றி மாற்றி மாற்றி இழுத்துக் கடைகின்றார்கள் உயர்ந்த பட்டாடை உடுத்தி, ஸர்வ ஆபரணங்களும் பூண்டு, வாஸனைத்தைலம் தடவி வாரி எடுத்துக்கட்டின அழகிய கூந்தலில் பூ வைத்து விளங்கிய கோப ஸுந்தரிகள். மநத்தில் இவ்வித பாவனையோடு இவள் வீட்டுக்குள் ஆய்ச்சியர் தயிர் கடையும் சப்தத்தை உற்றுக்கேட்டாள். மாறி மாறிக் கைகளை முன்னும் பின்னுமாக நீட்டி இழுக்கும் போது இரண்டு விலாப்பக்கங்களும் முன்னும் பின்னுமாக அசைவதால் கழுத்தில் பூண்டிருக்கும் தங்க ஆபரணங்களிலுள்ள காசுகளும் திருமங்கல்யங்களும் அசைந்து ஒன்றோடொன்று உறைந்து கலகல வென்று ஒலிக்கின்றன. கைகளிலணிந்திருக்கும் வளைகளும் அப்படியே. இந்த ஒலிகள் கேட்ட உடனே உள்ளேயுள்ள ஸ்த்ரீகளின் ஸ்வரூபம், அவர்கள்செய்துகொண்டிருக்கும் அலங்காரம், தயிர்கடையும் போதுள்ள அவர்களுடைய நிலை, எல்லாம் தோன்றும்படி மாநஸ ஸாக்ஷாத்காரம் இவளுக்கு உண்டாயிற்று. விடியற்காலையில் இயற்கையாய் வீசுகின்ற மெதுவான காற்று இனிய மணம் கமழ்ந்து வீசிற்று. அந்த மணம் எங்கிருந்து வருகின்றதென ஆலோசித்துப்பார்த்தாள். தயிர் கடையும் ஆய்ச்சிகளுடைய வாசநறுங்குழலிலிருந்து வருகின்ற தென்பது புலனாயிற்று. சிறந்த வாஸனைத் தைலம் தடவி வாரிப் பூ வைத்து முடிந்த அவர்களுடைய கூந்தலின் மணமே அது. ஆகவே இதையெல்லாம் பேசி ‘இத்தகைய கோபஸ்த்ரீகள் பெரும் மத்தையிட்டு கடையும் தயிரின் சப்தத்தை நீ கேட்கவில்லையா’ என்று சொல்லி அவ்வீட்டுப் பெண்ணை யெழுப்பினாள். அவள் அப்போதும் எழுந்திருக்கவில்லை. பகவானுடைய நினைவை உண்டாக்கும் இனிய சப்தங்களைக் காதினால் கேட்டு, திவ்ய பரிமளத்தை மோந்து, அருமையான காட்சியைக் கண்டு, களிக்கவேண்டிய ஸமயத்தில் இப்பெண் இப்படித் தூங்குகின்றாளே யென்று மிகவும் வருந்திய நாயகப் பெண் அவளை விழிக்கச்செய்ய என்ன உபாயமென்று ஆலோசித்துப் பார்த்தாள். ஒன்று தோன்றிற்று. அதைத் தோழிகளிடத்தில் தெரிவித்தாள்.

(தொடரும்)

ஸ்ரீ:

நற்போதுபோக்கு

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனின் ஸ்ரீபாத தீர்த்த மஹிமை.

ஹே ஹஸ்திகிரீசனே! கபடமாக வாமநாவதாரத்தைச்செய்ததேவரீர் இந்த ஜகத்தை அளப்பதற்கு த்ரிவிக்ரம ரூபம் தரித்து ஓரடியால் விண்ணையும் ஓரடியால் மண்ணையும் மற்றோர் அடியால் மஹாபலியின் சிரஸ்ஸிலும் வைத்து இப்படி மூன்று ப்ரகாரமாகத் திருவடியைக் கொண்டு அளந்தீர். அப்போது ஆகாசத்தில் வைத்த திருவடியின் கட்டை விரலைப் பிரம தேவன் திருமஞ்ஜனம் பண்ணிவைக்க, அந்தத் தீர்த்தம் கங்கையாக ப்ரவஹிக்க, அப்போது கைலாஸ வாஸியான ருத்ரன் பாதோதகமான அந்த கங்காதீர்த்தத்தைத் தலையில் தரித்துச் சிவனானான். அவன் சிவனானது மாத்ரமன்றி, தேவரீருடைய ஸ்ரீபாத தீர்த்தமாகிற கங்கையில் நீராடின ஸகல ஜந்துக்களும் சிவர்களாக ஆகிறார்கள். அதாவது — இந்த லோகத்திலும்பரலோகத்திலும் அநேகமங்களங்களை அடைகிறார்கள்.

['क्रामन् जगत्कपटवामनतामुपेतः
त्रेधा करीश स भवान्निदधे पदानि ।
अद्यापि जन्तव इमे विमलेन यस्य
पादोदकेन विधृतेन शिवा भवन्ति ॥']

என்று வாமந-த்ரிவிக்ரமாவதார வைபவங்களைப் பேசத் தொடங்கியதன் மூலம் கங்காவதார மஹிமையைப் பரக்க ஸாதித்தார் ஸ்வாமி தேசிகன். 'கங்கை கங்கை யென்ற வாசகத்தாலே கடுவினைகள் களைந்திடகிற்கும்' என்பது பெரியாழ்வார் அருளிய பொன்மொழி. இவைகளிலிருந்து கங்கையின் புநிதத்வமும் பெருமையும் எண்ணிறந்தவை யென்பது வெளிப்படை.

'ततः परतरं तीर्थं वैष्णवांघ्रिच्युतं जलम् ।
तेषां पादोदकं पुण्यं गङ्गामपि पुनाति हि ॥'

என்றும் ச்லோகதனைத ஆராய்ந்தால் ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாத தீர்த்தம் கங்கையையும் பரிசுத்தம் செய்யவல்லது என்பது வ்யக்தமாகப் புலப்படுகிறது.

'विष्णवङ्घ्रिनिर्गतसरित्प्रवरानुभाव्यौ
विद्याविनीत जनितैः विमलैः स्वतीर्थैः ।
व्यानम्रशिष्यजन रक्षण जागरूकौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥'

என்பது, ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனுடைய திருக்குமாரரான ஸ்ரீ நைநாராசார்யர் என்னும் அபர திருநாமத்தையுடைய ஸ்ரீ குமார வரதாசார்ய ஸ்வாமியால் அநுக்ரஹிக்கப்பட்ட 'ஸ்ரீ தேசிக ப்ரபத்தி'யில் 8-ம் ச்லோகம். [வித்யையினால் ஸிக்ஷிதர்களான ஸிஷ்யர்களாலே உண்டுபண்ணப்பட்டதும், தன்னுடைய தீர்த்தங்களாலே (ஸ்ரீபாத தீர்த்தங்களாலே) விஷ்ணுவினுடைய திருவடியினின்றும் உண்டாயிருக்கிற நதி ச்ரேஷ்டமான கங்கையினாலே அநுபவிக்கத் தகுந்ததும், விச்வாஸபூர்வகமாக வணங்கியிருக்கிற ஸிஷ்ய ஜநங்களை ரக்ஷிப்பதில் ஸமர்த்தங்களுமான ஸ்ரீ வேதாந்ததேசிகனுடைய திருவடிகளைச் சரணமடைகிறேன்.] என்பது இச்லோகத்தின் திரண்டபொருள். இதனால் ஸ்வாமி தேசிகனுடைய ஸ்ரீபாததீர்த்தம் கங்கைபோல் அநுபவிக்கத் தகுந்ததென்றும், அது மஹாபரிசுத்தமான கங்காதீர்த்தம்போல் பரிசுத்தமாயும், பாபநிவ்ருத்தியையும் புண்ய ஸம்ருத்தியையும் கொடுக்க வல்லதென்றும் தெளிவாகிறது. இதற்கோர் ஐதிஹ்யம் பின்வருமாறு.

ஒருநாள் தேசிகன், தமது திருமாளிகையில் க்ரந்தாவலோகநம் செய்து கொண்டிருக்கையில், கந்தாடை லக்ஷ்மணாசார்யர் என்பவர் தமது ஸிஷ்யவர்க்கங்களுடன் வீதியில் வந்து கொண்டிருந்தார். அப்போது அவர் ஸிஷ்யரான சாத்தாதவர்கள் சிலர், தமது ஆசார்யருக்கு மர்யாதை செய்யவில்லை யென்றகாரணத்தால் மாறுபாடு கொண்டு, ஸ்வாமி திருவடிகளைப் பலாத்காரமாகப் பிடித்து இழுத்தார்கள். ஸ்வாமி அதை உணர்ந்து பரபரப்புடன் எழுந்து லக்ஷ்மணாசார்யர் அருகில் எழுந்தருளி

‘अहन्ते नाहन्ते विहरणपदं देशिकगिरः
स्वदन्ते नस्स्वान्ते सपदि गतसन्देहविषयाः ।
अनायासायासा महिपतिशयासा भगवती
धराधाराधारा धरनिकर साधारणरुचिः ॥’

என்றருளிச் செய்து அவரிடம் அபராத க்ஷாமணம் செய்து கொண்டு, உடனே அவ்விடம் விட்டு ‘ஸத்யாகாலம்’ என்னும் க்ராமத்துக்கு எழுந்தருளிவிட்டார். பிறகு அந்த லக்ஷ்மணாசார்யருக்கு ப்ருஹத் ரோகமென்ற பெரிய வ்யாதி உண்டாயிற்று. அதற்குக் காரணம், தமது ஶிஷ்யர்கள் தூப்புற்பிள்ளையிடம் பட்ட அபராதமென்றும், ஸ்வாமியினிடத்தில் அபராத க்ஷாமணம் பண்ணிக்கொண்டு அவருடைய ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தினந்தோறும் ஸ்வீகரித்து வந்தால் இந்த ரோகம் நிவ்ருத்தமாகுமென்றும் தம் தேவியார் சொல்லக் கேட்டு, உடனே தேவியாருடன் ஸத்யாகாலம் சென்று, பிள்ளை திருவடிகளில் பல ஆவ்ருத்தி தண்டன் ஸமர்ப்பித்துத் தம் குற்றத்தைச் சொல்லி அபராத க்ஷாமணம் பண்ணிக்கொண்டு ஒரு வர்ஷகாலம் அங்கேயே இருந்துகொண்டு, ஸ்ரீபாஷ்யாதிகளை ஸேவித்து தினம் ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்துத் தமது தேவியாருடன் ஸ்வீகரித்து வந்தார். அந்த ஸ்ரீபாத தீர்த்தமஹிமையினால் அவரது திருமேனியிலிருந்த வ்யாதி ஸ்வஸ்தமானதோடு, அவருக்கு ஒரு குமாரரும் அவதரித்தார். அந்த குமாரர் தேசிகன் ஸ்ரீபாததீர்த்த வைபவத்தால் அவதரித்தபடியால், அவர் ‘தீர்த்தப் பிள்ளை’ என்று திருநாமம் சாத்தப் பெற்றார்.

இதனால் மஹாபாகவதோத்தமரிடத்தும் ஸதாசார்யர்களிடத்தும் படும் அபசாரம் அஸஹ்யாபசாரமென்பதும், அவர்கள் திருவடிகளில் விழுந்து வணங்கி வழிபடுவதைத் தவிர வேறு உய்வு இல்லையென்பதும் வெளிப்படுகின்றனவன்றோ?

பாகவதாபசாரம் பெருந்தீங்குபயக்குமென்பதைப் பின்வரும் மேற்கோள்களால் அறிக. [இக்காலத்துச் சிறுவர் அறியும்பொருட்டிவை தரப்படுகின்றன.]

திருக்குறள் 90ம் அதிகாரம் ‘பெரியாரைப் பிழையாமை’ பெரியார் என்னும்சொல், ஆற்றலால் பெரியராகிய அரசரையும், தவத்தாற் பெரியராகிய முனிவரையும் இரட்டுறமொழிதலால் குறிக்கும். (இரண்டுபொருள் ஒருங்குகொள்ள உரைப்பது இரட்டுறமொழிதலாகும்.) பொதுப்படப் ‘பெரியார்’ என்றதனால் அறிவு பருவம் ஒழுக்கம் இம்மூன்றினாலும் பெரியவராகிய ஜ்ஞானவ்ருத்தர், வயோவ்ருத்தர், சீலவ்ருத்தர் என்னும் இவரையுமுணர்த்தும். பிழையாமை— பிழைசெய்யாமை. (அபசாரப்படாமை)

‘கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னாசெயல்’ [90-4]

[இதன்பொருள்] பெருமை அறிவு முயற்சி என்னும்மூவகை ஆற்றலுமுடையவர்க்கு, அவ்வாற்றல் இல்லாதவர் தீமையைத்தருங்கார்யத்தைச் செய்தல், தானேவரும் தன்மையனான யமனை, அதற்குமுன்னே கைகாட்டி அழைப்பதுபோலும். ஆதாவது— பிறர்வலியறியாமல் அவரை வலியப் போருக்கு அழைத்தல் தீங்குக்கே காரணமாகும் என்பது கருத்து.

‘எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார் பெரியார்ப் பிழைத்தொழுகுவார்’ [90-6]

[இதன்பொருள்] காட்டின்வழியாகச்சென்றவன் ஒருவன், அக்காட்டுத்தீயால் சுடப்பட்டாலும் ஒருவழியில் பிழைத்தல் கூடும். பெரியோர்க்குப் பிழைசெய்து நடப்பவர் எவ்வழியாலும் உயிர் பிழைத்தல் இயலாது.

‘ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும்’ [90-9]

[இதன்பொருள்] உயர்ந்த வ்ரதங்களையுடைய பெரியோர் சீற்றம் கொள்வாராயின் அவர் வலிமையால் இந்த்ரனும் நடுவே தன்பதமிழந்து கெடுவான். சந்த்ரகுலத்தரசனான நஹுஷன் என்பான் நூறு அச்வமேதயாகஞ் செய்து இந்த்ரபதம் பெற்றுப் பல்லக்கிலேறிச் செல்கின்றபோது இந்த்ராணிமேல் வைத்த காதலால் தன் பல்லக்கைத் தாங்கிச் செல்கிற எழு முனிவர்களுள் அகத்தியர் குறுமுனிவராதலால் பல்லக்கு மந்தகதியிற்செல்ல, அரசன் அகத்தியரை நோக்கி ‘விரைவிற்செல்க’ என்னும் பொருளில் ‘ஸர்ப்ப ஸர்ப்ப’ (ஓடு ஓடு) என்று கூற, அகத்தியர் அதுகேட்டு வெகுண்டு, ‘நீ ஸர்ப்பமாகுதி’ என்று ஶபிக்க, அக்கணமே அவன் இந்த்ரபதமிழந்து பாம்பாகி நிலத்திற்கிடந்தானென்னும் வரலாறு ஈண்டு

ஸ்ரீ:

ஹம்ஸஸந்தேசம்

काल्ये सेनां कपिकुलपतेस्तूर्णमुद्योजयिष्यन्
दूरीभावाज्जनकदुहितुर्दूयमानान्तरात्मा ।
क्रीडाखेलं कमलसरसि क्वापि कालोपयातं
राकाचन्द्रद्युतिसहचरं राजहंसं ददर्श ॥

பொழுது விடியும்வரையில் ஓர் கல்பம்போல் நீண்டதாகத் தோன்றிய இரவை மிகவும் கஷ்டத்துடன் பொறுத்தார் என்று முன் ச்லோகத்தின் முடிவில் கூறப்பட்டது. 'न जीवेयं क्षणमपि विना तामसितेक्षणाम्' ஸீதையை விட்டு ஒரு க்ஷணங்கூட தான் பிரிந்து ஜீவிக்க முடியா'தென்று அன்றையதினமே கூறினவர் எப்படி ஓர் இரவு முழுவதையும் ஸஹித்தார் என்றால், பொழுது விடிந்ததும் வானரஸேனையை லங்கைக்கு அதன்மீது படை எடுக்கக் கிளப்பிக்கொண்டு போகும் ஏற்பாடுகளையும் ஸம்ப்ரமங்களையும் மனோரதித்துக் கொண்டும், ஒரு தாமரையோடை எனும் தன்னுடைய ப்ரியையான பத்மிநீ (தாமரஸரஸ்) யிடம் வந்து இன்புறும் ராஜஹம்ஸத்தைப் பார்த்து அதன் மூலமாய் ஸீதைக்கு ஓர் ஸந்தேசத்தைத் தெரிவிக்கலாமென்று எண்ணி அதனோடு பேசிக்கொண்டும், ஒரு செய்தியை அவளுக்கு லங்கைக்குப் போய் சொல்லும்படி அதை ப்ரார்த்தித்துக்கொண்டும் பொழுதைப் போக்கினாரென்கிறார். லங்கையிலுள்ள ராக்ஷஸர்களை மாய்த்து ஸீதையை மீட்பதற்காக ஆகவேண்டிய ஸேனையைக் கிளப்பும் வ்யாபாரங்களும் ஸீதையினுடைய கவலையை ஶமநம் செய்து அவளுக்குத் தேறுதல் அளிப்பதற்காக ஹம்ஸதூதனை அனுப்புவதும் ஸீதாவிஷயமான முயற்சியானதால் அவள் விரஹத்தைப் பொறுப்பதற்கு ஸாதனமாயிற்று. काल्ये — பொழுது விடிந்ததும். உஷ: காலத்திலேயே ராத்ரி நீங்கி உஷஸ்ஸு வந்த பின்பு ஒரு க்ஷணங்கூட ஸேனைப்புறப்பாட்டைத் தாமதிக்க முடியாது. பொழுது விடிவது தான் தாமதம். கால்யமென்பதற்கு மங்களமென்றும், பொழுது விடிவு என்றுமிரண்டு பொருள்களையும் கொள்ளவேணும். ஸீதாவியோகத்திற்குப் பிறகு எத்தனையோ தினங்களில் ப்ரபாதம் வந்திருந்தாலும் அந்தப் பகல்களும் ஸீதாவிரஹத்தில் ராத்ரியாகவே இருந்தன. இந்த ராத்ரி விடியும் ப்ரபாதம் தான் மங்களமான ப்ரபாதமாயிற்று என்பதை மங்களப் பொருளும் உள்ள கால்யபதத்தால் ஸூசிப்பது ரஸம். सेनां उद्योजयिष्यन् – லங்கையை எதிர்க்க ஸேனையைக் கிளப்பும் ஸம்ப்ரமங்களை நினைத்துக்கொண்டும். யாருடைய ஸேனை? அயோத்தியிலுள்ள ப்ராதா பரதருடைய ஸேனையை மைத்துனர் பரதர் லங்கையைப் படையெடுக்க அனுப்புவாரா? என்று ஸீதை ஹநுமாரிடம் கேட்டாள். அந்த ப்ராதா பரதருடைய மநுஷ்யஸேனையல்ல. மற்றோர் ப்ராதா ஸூர்யபுத்ரராகிய ஸுக்ரீவருடைய ஸேனை என்பதைக் 'கபிகுலபதே: ஸேநாம்' என்பதால் கூறுகிறார். கபி என்பது ஸூர்யனுக்கும் பெயர். ஸூர்யபுத்ரரான ஸுக்ரீவர் கபிகுலத்தைச் சேர்ந்தவர். ஸவிதாவினுடைய வம்சத்தில் பிறந்த ராமதேவரை முன் ச்லோகாரம்பத்தில் கூறியுள்ளார். பரதரைப்போல் இந்த ஸுக்ரீவனும் ஸமானகுலஸ்தர். வானரகுலமென்று கூறினால், ஆதியில் ப்ரஹ்மாதிதேவரால் உத்தேசிக்கப்பட்டபடி இந்த்ரபுத்ரராகிய வாலியே நாயகராக நடத்தும் ஸேனையோ என்ற ஸம்சயத்தைக் கொடுக்கக்கூடும். கபிகளின் ஸேனை என்பது ஆச்சர்

அறியத்தக்கது.

நாலடியார்

'விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்று முட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்து முய்யார்
பெருமை யுடையார் செறின்' [17-4]

[இதன்பொருள்] படம் விரிக்கும் தன்மையுள்ள ஒளியையுடைய பாம்பானது வெடிப்பு நிலத்தினுள்ளேயிருந்தாலும், வானத்தில் நெடுந்தூரத்தில் இடியோசை கேட்டாலும் அதற்குப் பயப்படும். அதுபோல பெருமைக்குணமுடைய பெரியோர் விஷயத்தில் பிழை செய்தவர் புகுதற்கரிய அருமையான சாவலிடத்தைச்சேர்ந்திருந்தாலும் உயிர் வாழமாட்டார்.

யத்தைத் தரக்கூடியது. கபிகளின் சாபல்யம் ப்ரஸித்தம். நினைத்தபடி அங்குமிங்கும் தாவிக்கொண்டே இருக்கும் ஸ்வபாவம். ஸைநிகர்களுக்கு சாபல்யமே கூடாது. ஒழுங்குக்கும் கட்டுப்பாடுக்கும் முழுவதுமடங்கி இருக்க வேணும். சாபல்யம் ஸ்வபாவமாக இருந்தாலும் ஸுக்ரீவாஜ்ஞை என்று ப்ரஸித்தமான பயங்கராஜ்ஞைக்குஉட்பட்டு அத்யந்தம் ஒழுங்காய் நடக்கக்கூடியதென்பதை 'கபிகுலத்திற்கு பதியான ஸுக்ரீவரின் ஸேனை' என்பதால் காட்டுகிறார். தூர்ணமென்பதற்கு சடிதி, விரைவில், வேகமாய் என்று பொருள். அதி வேகமாய் ஸேனைகளை நடத்தவேணுமென்று த்வரை. **'अभियाता प्रहर्ता च सेनानयविशारदः'** என்று அயோத்யாகாண்டாரம்பத்தில் வர்ணிக்கப்பட்ட ஸேனையை நடத்தும் ஸாமர்த்யங்களுக்கு இதற்கு முன்பு அவகாசமில்லை. இப்பொழுது தான் அந்த யுத்ததந்த்ரகௌஶலத்திற்கு அவகாசம் ஏற்பட்டது.

'जनकदुहितुर्दूरीभावात् दूयमानान्तरात्मा देवः श्रीमान्' என்று ஸ்ரீயோடு நித்யயுக்தரான ஆதிதேவனாயிருந்தும் இப்பொழுது இந்த அவதாரத்தில் ஸீதாதேவி உத்தமவேதாந்தியும் கர்மடருமான ஜநகருடைய புத்ரி அபிமானத்திற்கு விஷயமாய் அவதரித்ததால், **'स उ श्रेयान् भवति जायमानः'** என்கிற ச்ருதி காட்டிய முறையில் ஸ்ரீதேவியே ஸீதாரூபாவதாரத்தால் ச்ரேயஸீ ஆனாள். அந்த ஏற்றத்தையுடைய ஜாநகீ மிக தூரத்தில் பிரிந்திருந்ததால் எல்லோரையும் ரமிப்பித்துக்கொண்டு தாமும் **'अन्योऽन्तर आत्मा आनन्दमयः'** என்ற ச்ருதிப்படி ஸ்வயம் ஸதா ஆனந்தமயனாயிருந்தும் இப்பொழுது அவர் துக்கமயமாக இருக்க நேரிட்டது. அந்த துக்கத்தைப்போக்க இரவில் சஞ்சரிக்கையில், ஒரு தாமரைத் தடாகத்திற்கு அந்த சரத்காலத்தில் வந்து உல்லாஸமாய் விளையாடிக்கொண்டிருந்த ராஜஹம்ஸம் கண்ணிற்பட்டது. 'க்ரீடாகேலம்' தாமரை ஸரஸ்ஸு என்னும் பத்மிநியை ராஜஹம்ஸம் ப்ரியைபோல் பாவித்து விளையாடுவதாக வர்ணிப்பர். **'प्रत्यायास्यन्ननुनय शनैः पद्मिनीं स्वादु वाचा'** 'ஸீதாதேவியின் ஆறுதலுக்காக ராம ஸந்தேசத்தை லங்கைக்குப்பறந்து தெரிவித்துவிட்டு வந்து விடுவதாக உன் ப்ரியையான பத்மிநியிடம் நயமாகச்சொல்லி அநுமதிபெற்றுக்கொள்' என்று மேலே கூறப்போகிறார். மேகஸந்தேசத்தில் 2-வது ச்லோகத்தில் யக்ஷன் பார்த்த மேகம் மலைச்சரிவுகளிலும் நதிக்கரைகளிலும் உடம்பை வளைத்துக்கொண்டு தந்தத்தால் முட்டிக்கொண்டு அழகாக விளையாடும் யானைபோல் யானைவர்ணமும் அதன் ஆகாரமுமான மேகம் அப்பொழுது தான் மலையின் உச்சியில் வந்து உட்கார்ந்த அழகு வர்ணிக்கப்பட்டது. அங்கே மேகத்திற்கு உபமானமான கஜத்தின் க்ரீடை வர்ணிக்கப்பட்டது. இங்கே தூதரான ராஜஹம்ஸத்தின் ஸாக்ஷாத்தான விளையாட்டையே வர்ணித்துள்ளார். 'விதியினாற்பெடை மணக்கும் மென்னடைய வன்னங்காள்' என்று ஆழ்வார் ராஜஹம்ஸத்தை தூதராக வரிக்கையில் அன்னப்பேடையோடு ஸம்ச்லேஷஸுகத்தையநுபவித்த ஹம்ஸத்தை வரித்துள்ளார். இங்கு வரிக்கப்படுவது பத்மிநீ என்னும் இனியாளோடு விஹரிக்கும் ஹம்ஸம். 'மென்னடைய வன்னங்காள்' என்று அங்கே அன்னநடையை வர்ணித்தபடி இங்கே அடுத்த ச்லோகத்தில் **'तस्मिन् सीतागतिमनुगते'** என்று வர்ணிக்கப்படுகிறது. **'कमलसरसि क्वापि-** ஏதோ ஒரு பத்மிநியில் வந்து விளையாடும் ஹம்ஸத்தை என்பதால் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கையில் ஹம்ஸம் விளையாடாத பத்மிநிகளும் மார்க்கத்தில் கடக்கப்பட்டதாகக்கொள்ளலாம். **'कालोपयातम्'** சரத்காலம் தொடங்குவதால் ஹம்ஸங்கள் பூமிக்கு வந்து விஹரிக்கும் காலம் என்ற பொருளோடு கூட தம்முடைய பாக்ய பரிபாககாலத்தில் ஸீதைக்கு தூது அனுப்ப அத்ருஷ்டவசத்தால் அங்கே ஹம்ஸம் வர நேர்ந்தது என்றபொருளும் கொள்ளவேணும். 'விதியினால்' என்ற ஆழ்வார் பாசுரப்பதத்திற்கும் நாயகிபாவமடைந்த ஆழ்வாரின் பாக்யத்தால் என்றும் பொருள் ஸாதிக்கப்பட்டது. உபயாதம் என்பதால் அதுவாக தன் ஸமீபத்தில் வந்திருக்கும் பாக்யத்தைக் குறிக்கிறார். தூதனுப்பி ஸீதையை ஆற்றவேண்டுமென்று நினைக்கையிலேயே இந்த ஹம்ஸம் அருகே வந்து உல்லாஸமான மனதோடு இருக்கும் பாக்

ஸ்ரீ:

மார்கழிமாதம்

பன்னிரண்டு தமிழ் மாதங்களிலே மிகவும் சிறந்ததாகக் கருதப்படுவது மார்கழிமாதம். ‘ஶாஸா நாம [illegible]’ என்று கீதாசார்யன் உகந்ததும் இதுவேயாம். ஆனதுபற்றியேதான் நம் திருப்பாவையும் இம்மாதத்தைத் தேர்ந்து எடுத்தனள்போலும். இப்படி திவ்யதம்பதிகளின் கடாக்ஷத்தினால்மட்டும் இதற்குப் பெருமையில்லை. பகவதநுக்ரஹத்தைக் காட்டிலும் பாகவதாநுக்ரஹம் விசேஷமன்றோ! ‘நாதனை நரசிங்கனை நவின்றேற்றுவார்கள் உழக்கிய பாததூளி படுதலாலிவ்வுலகம் பாக்கியம் செய்ததே’ என்றவாறு நம் பக்தாங்க்ரிரேணு அவதரித்ததாலுமே இம்மாதத்திற்குச் சிறப்பு.

இங்கு மேற்படி மாதத்தை சூடிக்கொடுத்த சுடர்கொடி எவ்வாறு அநுபவிக்கிறாள் என்பதும், இம்மாதத்தில் அவதரித்த ஆழ்வாரின் வைபவம் பற்றியும் சிறிது பேசப்படுகிறது.

கோதைக்குக் கண்ணன்பால் காதல் பெருகிவிட்டது. அவன்விஷயகமான வேட்கை விஞ்சியவளாகி அவனை கணப்பொழுதும் காணாதிருக்கமுடியாமல் அவன்பிரிவு அவளுக்கு ஆற்றமுடியாததாகிவிட்டது. அவனையடைய கோபஸ்த்ரீகளைப்போலத் தானும் நோன்பு நோற்க ஆரம்பித்தாள். அவ்வாறான எண்ணம்தோன்றியவுடன் தன்னை கோபஸ்த்ரீயாகவே எண்ணிவிட்டாள். பெரியோர்கள்மூலம் கோபிகைகள் நோன்பு நோற்றவிதம் அறிந்தவளாதலின் தத்விஷயகமான நினைவுகள் வரத்தொடங்கின. உடனே கவிதை பெருக்கெடுத்து ஓடுகிறது.

கோபிகைகள் உஷ:காலத்தில் நோன்பு நோற்க யமுனைக்கரைக்கு ஒன்றாகச்செல்கின்றனர். செல்லும்பொழுது இன்னுந் தங்களுடன் கலந்துகொள்ளாத மற்ற தோழியரையும் துயிலெழுப்பித் தங்களுடன் அழைத்துச் செல்கிறார்கள். இதோ நப்பின்னை பிராட்டியின் க்ருஹத்திற்கு வந்துவிட்டனர். உள்ளே நப்பின்னை நங்கை கையால் பந்தை அணைத்தவாறு கண்ணயர்கின்றாள். இரவு முழுவதும் எம்பெருமானுடன் பந்து விளையாடிய அயர்வு போலும் பிராட்டிக்கு. இச்சமயத்தில் வாசலில் தோழியர் பாடுகின்றனர்.

‘உந்துமதகளிற்றன் ஓடாததோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்!

என்று.

பெண்களுக்குப் பெருமை புக்ககத்தினால்தான்; பிறந்த இடத்தாலல்ல. இக்காலத்துப் பெண்களோவெனில் தன் புக்ககத்தை இழிவு

யம் நேர்ந்ததென்று அநுபவம். ‘राकाचन्द्र—द्युतिसहचरं’ பூர்ணிமாசந்த்ரன் போல் வெண்மையோடு அழகாய் விளங்கும் ஹம்ஸம். சந்திரன் ஆகாசத்தில் செல்வதுபோல் அழகாக இந்த ஹம்ஸமும அன்றிரவு ஆகாசத்தில் பரந்துகொண்டு போகும். ராஜஹம்ஸம். இங்கே யதிராஜர்போன்ற ஆசார்யஹம்ஸரை ஸ்வாமியும் ராமனும் நினைப்பதாகக் கொள்ளலாம். ‘चारणाचरिते पथि’ என்று ஸுந்தரகாண்டாரம்பத்தில் மஹரிஷியும், ஸங்கல்பஸூர்யோதயத்தில் ‘हनुमत्समेनगुरुणा प्रख्यापितार्थः पुमान् लङ्कारुद्धविदेहराजतनयाव्याजेन लालप्यते’ என்று இக்கவியே தாமும் வர்ணித்தபடிக்கு முன் லங்கைக்குச் சென்று திரும்பிவந்த தூதஹநுமத்ஸமமான ஓர் பரமஹம்ஸ தூதகுருவின் நினைப்பு இந்த ராஜஹம்ஸபதத்தாலும், ஹம்ஸத்தை தூதராக இந்தக் காவ்யத்தில் அமைத்திருப்பதாலும், ஆழ்வார் மென்னடைய வன்னங்களை தூதனுப்பிய பாசுரமிங்கு கவிக்கு புத்திஸ்தமாயிருப்பதாலும், ‘लक्ष्मणस्याग्रजन्मा’ என்று அடுத்தாற்போல் இந்தக் காவ்யாரம்பத்திலேயே லக்ஷ்மணநாமஸங்கீர்த்தநம் செய்து ‘कर्णे शीधुं तव रचयिता लक्ष्मणश्चापघोषैः’ என்று மேலே காவ்ய முடிவு பாகத்திலும் லக்ஷ்மணநாமஸங்கீர்த்தநம் செய்வதாலும் ஏற்படுகிறது.

படுத்திப் பிறந்தகத்தின் பெருமையைப் பறை சாற்றுகின்றனர். இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆயினுமிது தவறு. ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸீதாபிராட்டி தன் விவாஹாநந்தரம் தன் பிறந்தகத்திற்குச் சென்றதாகவோ, அல்லது அவள் அதுபற்றி நினைத்ததாகவோ காணவில்லை. தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளவேண்டிய ஸந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் தான் தசரதமஹாசக்ரவர்த்தியின் மருமகள் என்றே பெருமையுடன் பேசுகிறாள். இது அக்காலத்திய வழக்கம். ஆகையாலிங்கு கோபிகளும் நப்பின்னையை 'அனேகயானைகளுக்கதிபதியும், மிக்க தோள்வலி பெற்றவருமான நந்தகோபரின் மருமகளே' என்று சிறப்பித்து, பொழுதுபுலர்ந்ததின் அறிகுறிகளை அவளுக்கு நன்கு விளக்கி, 'செந்தாமரைக்கையால் சீரார் வளையொலிப்ப வந்து' திறக்கவேண்டுமென்று கூறுகிறார்கள்.

இப்பாசுரம் ஸ்ரீஸந்நிதிகளில் இரண்டாவ்ருத்தி ஸேவிக்கப்படுகிறது. இதற்குக்காரணமும் ஒரு நிகழ்ச்சி மூலமாகச் சொல்லப்படுகிறது.

எம்பெருமானார் ஸ்ரீரங்கத்தில் தாம் எழுந்தருளியிருந்த காலத்தில் பிக்ஷைக்கு வீதியில் எழுந்தருளுவது வழக்கம். அப்படி எழுந்தருளும்பொழுது திருப்பாவையை அநுஸந்தித்துக்கொண்டே எழுந்தருளுவார். ஒரு நாள் பெரியநம்பிகளின் திருமாளிகைவாசலில் எழுந்தருளும்போது மேற்படி பாசுரத்தின் அநுஸந்தானம் நடக்கிறது. நம்பிகளின் குமாரத்தி அத்துழாய் வாசலில் ஸ்வாமி எழுந்தருளுவதையறிந்து, கைகளில் வளையல்கள் சப்திக்க ஓடிவந்து கதவைத்திறக்கிறாள். அவள் கதவைத் திறப்பதற்கும் 'செந்தாமரைக்கையால்' என்னும் அடியை ஸ்வாமி ஸேவிப்பதற்கும் ஸரியாக இருந்தது. தான் அவ்வடியை ஸேவிப்பதற்குச் சரியாக அவள் அங்கு நிற்றலைக் கண்டவுடன் ஸ்வாமிக்கு ஸாக்ஷாத் நப்பின்னை பிராட்டியே ப்ரத்யக்ஷமாகிவிட்டதாக ஓர் நினைப்பு ஏற்பட்டு தத்க்ஷணமே மூர்ச்சையாகி விடுகிறார். இதுகண்டு பயந்து உள்ளே ஓடி அப்பெண் தன் தகப்பனாரிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் சிரித்துக்கொண்டே தம்மகளைத்தேற்றி, 'உந்துமதகளிற்றனுபவமோ' என்று ஸாதித்தாராம். அதனால் அப்பாசுரத்தை விசேஷமாகக் கருதி இரண்டாவ்ருத்தி ஸேவிக்கிறார்கள்.

தொண்டரடிப்பொடியாழ்வார்

'கோதண்டே ஜ்யேஷ்ட நக்ஷத்ரே
மண்டங்குடி புரோத்பவம் ।
சோளோர்வ்யாம் வநமாலாம்ஶம்
பக்தபாதரேணும் பஜே ॥'

என்றபடி மார்கழித் திருக்கேட்டை நன்னாளில் லோகோஜ்ஜீவநார்த்தமாக எம்பெருமானின் வைஜயந்திமாலையின் அம்சமாக அவதரித்தருளினார் திருத்தொண்டரடிப்பொடிகள். 'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத! । அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥' என்று தானருளிச்செய்தவாறு பகவான் சேதநர்களை உஜ்ஜீவிப்பித்தற்காகவும், அவர்களை குமார்க்கத்திலிருந்து நல்வழிப்படுத்தவும் கர்ப்பவாஸாதிகளை ஏற்று நடத்திக்காண்பிக்கிறான். இது 'ஸ்வயமாசரதே யஸ்து' என்பதற்கேற்ப அவனுடைய பரமாசார்யத்வத்தைக் காண்பிக்கிறது. ஆகவே தன் அம்சபூதரான மேற்படி ஆழ்வாரை இப்பூவுலகின்கண் அவதரிக்கச் செய்து அவரை விஷயாதிகளில் ப்ரவ்ருத்திக்கப்பண்ணி, அதனாலேற்பட்ட ராஜஸ்ஸேவை முதலானதுகளால் காம, க்ரோத, மத, மாத்ஸர்யங்களின் சேர்க்கையாலே பழுதே பல பகலும் போயின வென்று தம் வாழ்நாளை வீணாக்கும் வீணர்களை விழிப்படையச் செய்து ஆழ்வாரின் அவதாரத்தை ஸபலமாக்குகிறான். இதுதான் ஆழ்வாரின் அவதார ரஹஸ்யம்.

எல்லாம் விதியின் செயல் என்பார்கள். அவ்விதிக்கு நம் ஆழ்வாரும் விலக்கல்லர். தெரிந்தோ தெரியாமலோ ஸதா பகவத்த்யாநமும், பகவத்கைங்கர்யமும் செய்துவந்த இவருக்கு ஓர் கணிகையின் ஸஹவாஸம் பரிபூர்ணமாகக் கிடைத்தது. எப்பெருமானின் திருவிளையாடலை இங்குதான் காணவேண்டும். உன்னதமான ஓர் லக்ஷியம் நிறைவேறவேண்டுமெனில் அதற்கான த்யாகம் மிகவும் அவச்யம். இது இக்காலத்திய நவீனர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் உண்மை. லோகோஜ்ஜீவநம்

எம்பெருமானின் மாபெரும் லக்ஷியம். அல்லக்ஷியத்திற்கான த்யாகத்தீயிலே ஆழ்வாரைக் குதிக்கச்செய்தான் ஸூத்ரதாரி. இது அவனுடைய திருவிளையாடலுக்கோர் எடுத்துக்காட்டு. மற்றவர்களின் உஜ்ஜீவனத்திற்காக தம்முடைய பகவதநுஸந்தானத்தைத் த்யாகம் செய்து செயற்கரிய செய்தார் ஆழ்வார். இது அவருடைய மாபெரும் த்யாகத்துக்கோர் எடுத்துக்காட்டு. இவ்வாறு விதியினால் அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட இருள் அரங்கனின் அருளினால் விலகிற்று. என்னதான் பகவதம்சமானாலும் இப்புவியில் பிறப்பெடுத்தவரல்லவா. பிறவிக்கடல் நீக்கும் அவனை 'ஸூதாநம் ஸநாஷாவேநு' என்று தன்னைக் கூறிக்கொள்ளும்பொழுது இவர் எம்மாத்ரம்! தம் பூர்வஜந்ம அறிவு அப்போதில்லை அவருக்கு. தம்மை வெறும் விப்ரநாராயணனாகவே எண்ணிக்கொண்டிருக்கிறார். தாம் செய்து வந்த பகவத்கைங்கர்யமும், தம்முடைய இப்போதைய இழிநிலையும் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவுறத் தெரிந்தன. அவர் செய்த பாபச்செயல்களெல்லாம் ஒன்று சேர்ந்து பேய் உருக்கொண்டு அவரை வாட்டி வதைத்து கசக்கிப் பிழிந்தன. நேராக அரங்கனின் அரங்கத்திற்குச் சென்று நெகிழ்ந்து நெக்குருகி நெஞ்சிக் கதறினர். தாம் செய்த தவறுகளையெல்லாம் ஒன்றுவிடாமல் ஒப்பித்தார். கூடவே தாம் அவ்வாறிருந்தும் தம்மை தடுத்தாட்கொண்ட அவ்வெம்பிரானின் ஸௌலப்ய ஸௌசீல்ய குணங்களையும் வியந்து பாராட்டுகிறார். இதோ அவர் திருவாயினாலேயே கேளுங்கள்.

'சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடிசைந்த காலம் மாதரார் கயற்கணென்னும்வலையுள்பட்டழுந்துவேனை, போதரே என்று சொல்லிப் புந்தியுள்புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்த அழகனார் அரங்கமன்றே.'

பிறமதங்களில் கன்ஃபெஸ் (Confess) என்பார்கள். அதாவது தான் செய்தபாபச் செயலுக்கு வருந்தி பகவானிடம் முறையிட்டு மன்னிப்பு கேட்பது என்றதற்குப்பொருள். எவனொருவன் அவ்வாறு முறையிட்டு மன்னிப்புக்கோருகிறானோ அவனை எம்பெருமான் அவச்யம் க்ஷமித்தருளுகின்றானென்பது அம்மதக் கோட்பாடு. இவ்வுண்மை நம்மதத்திலே கண்டதே தவிர புதிதொன்றுமில்லை. ஆழ்வார் எம்பெருமானிடம் மேற்சொன்னவாறு முறையிட்டபிறகு மாஸ்த்ரஜ்ஞர்களான பெரியோர்களையண்டித் தாம் செய்த செய்கைக்கு ப்ராயச்சித்தம் கேட்கிறார். அவர்களும் இவர்பால் கருணைவைத்து நூல்களை நன்கு அலசி ஆராய்ந்துபார்த்து ஸகலபாபங்களும் பரிஹ்ருதமாவதற்குத்தக்க ப்ராயச்சித்தங்களைப் புகன்று மேலும் பாகவதர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை பரிக்ரஹிக்கவும், அன்னார் திருவடித்தூள்களைச் சிரமேற்கொள்ளவும் ஆஜ்ஞாபித்தனர்.

ஆழ்வாரும் அவ்வாறே செய்து துடைக்கப் பெற்றமாசுடையராய் பழையபடி எம்பெருமானுக்கு திருமாலை கைங்கர்யம் செய்துகொண்டு

'ஆடிப்பாடி யரங்கவோ வென்றழைக்கும் தொண்டரடிப்பொடியாட நாம் பெறிற் கங்கைநீர் குடைந்தாடும்வேட்கையென்னாவதே'

என்றவாறும்,

'ஆறுபோல் வரும் கண்ணநீர் கொண்டரங்கன்கோயில்திருமுற்றஞ்சேறுசெய் தொண்டர் சேவடிச்செழுஞ்சேறென் சென்னிக் கணிவனே'

என்றவாறும், விஷயாதிவிமுக்தராய் பக்தாங்க்ரிரேணு என்றும், தொண்டரடிப்பொடியாழ்வாரென்றும் எல்லோராலும் கொண்டாடப் பெற்று நூற்பொருளிலே நுழைந்த நெஞ்சுடையராய் விளங்கினர். மேலும் அரங்கன் விஷயமாக 'திருமாலை', 'திருப்பள்ளியெழுச்சி' என்னும் தமிழ்பாக்களையுமருளிச்செய்தார். அதில் விசேஷமாக 'தலையறுப்புண்டும்சாவேன் சத்தியம் காண்மினையா, சிலையினால் இலங்கை செற்றதேவனே தேவனாவான்' என்று எம்பெருமானின் பரத்வத்தைக்காட்டியும், 'நமனும் முத்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி' என்று பகவந்நாமோச்சாரணமாஹாத்ம்யத்தினால் மக்களுக்கு யமவாதனை இல்லை யென்று எடுத்துக்கூறியும் உலகத்தாரை வாழ்வித்து அநேகமாண்டு வாழ்ந்திருந்து எம்பெருமான் பக்கலையடைந்தார்.

இப்படிப்பட்ட மஹநீயர்களால் பெருமை வாய்ந்த இம்மார்கழித்திங்களில் நாமும் கண்ணன் கழலிணையை நண்ணுவோமாக.

ஸ்ரீ:

ஸ்ரீ பாகவதத்தில் சில தர்மங்கள்

'वेदोखिलो धर्ममूलम्' என்றார்கள் மஹரிஷிகள். 'ஸூக்ஷ்மமான தர்மங்களை அறிய வேதமே ப்ரமாணம்' என்று அதன் பொருள். வேதத்தில் உட்புகுந்து ஸூக்ஷ்ம தர்மங்களை அறிய சக்தியில்லாதவர்களுக்காக வேதார்த்தத்தை நன்கு அறிந்த மஹரிஷிகள் தர்மசாஸ்த்ரங்களை உண்டாக்கினார்கள். அவற்றிலும் சக்தியில்லாத மந்த மதிகளும் அந்த வேதார்த்தத்தையறியும்பொருட்டு இதிஹாஸங்களும், புராணங்களும் ஏற்பட்டன. இதிஹாஸம் என்பவை ஸ்ரீராமாயணமும், மஹாபாரதமும். புராணங்கள் ஸ்ரீவிஷ்ணு புராணம், ஸ்ரீபாகவதம் முதலியனவாம். வேதார்த்தம் எல்லோருக்கும் மனத்தில் எளிதில் படும்படி பகவானுடைய கதையையோ பாகவதர்களுடைய கதையையோ எடுத்துச்சொல்லும் வ்யாஜத்தால் வேதத்தில் அங்கங்குப் பதிந்து கிடக்கும் ஸூக்ஷ்மதர்மங்களை இப்புராணங்கள்வெளியிடுகின்றனவாகும். ஆக இவ்விதத்தால் புராணங்கள் வேதத்திற்கு (உபப்ரஹ்மணங்கள்) வ்யாக்யானங்களாயின. அப்படியிருந்தும் அந்த புராணங்களை வாசித்துத் தெரிந்து கொள்ளச் சக்தியில்லாதவர்களுக்காக அத்தகைய புராணங்களில் பதிந்து கிடக்கும் தர்மங்களை எளிய நடையில் தமிழ் பாஷையில் எடுத்துரைப்பதும் ஒரு சிறந்த கைங்கர்யமென நினைத்து முதலில் ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தத்திலிருந்து ஆரம்பித்து அத்யாயந்தோறும் உள்ள ஸூக்ஷ்ம தர்மங்கள் சில இப்போது 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' வின் மூலம் வெளியிடப்படுகின்றன.

ஸ்ரீபாகவதம் பத்தாம் ஸ்கந்தம் முதல் அத்யாயம்

ஸ்ரீ பரீக்ஷின் மஹாராஜனுக்கு மஹரிஷி சுகப்ரஹ்மம் நாநாவிதமான பகவச் சரித்ரங்களை ஸ்ரீபாகவதத்தில் எடுத்து உபதேசிக்கிறார். அந்த க்ரமத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய லீலைகளையும் வீர்யங்களையும் 9-வது ஸ்கந்தத்தின் முடிவில் மிகவும் சுருக்கமாக உபதேசித்தார். அவ்வளவால் த்ருப்தியடையாத பரீக்ஷின் மஹாராஜன் நமக்கு ஸ்ரீக்ருஷ்ண லீலைகளை சுருக்கமாக உபதேசித்ததில் த்ருப்தி உண்டாகவில்லையென்றும், அவற்றையே விஸ்தாரமாக உபதேசிக்கவேண்டுமென்றும் இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் வேண்டிக்கொள்கிறார். ஸ்ரீசுகப்ரஹ்மமும் இவருடைய ஆழ்ந்த பகவத்பக்தியைக்கண்டு, மகிழ்ந்து, இவருடைய ப்ரச்னங்களை வெகுவாகக் கொண்டாடி விஸ்தாரமாக ஸ்ரீக்ருஷ்ணலீலைகளை எடுத்துச்சொல்லுகிறார்.

இவ்வளவால்—'इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन। न चाशुश्रूषवे वाच्यं नच मां योभ्यसूयति' என்றும் 'य इमं परमं गुह्यं मद्भक्तेष्वभिधास्यति। भक्तिं मयि परां कृत्वा मामेवैष्यत्यसंशयम्' ॥ என்றும் இது முதலான ப்ரமாணங்களால் பகவத்பக்தியில்லாதவனுக்கும், சாஸ்த்ரத்தில் சிரத்தையில்லாதவனுக்கும், அஸூயையுள்ளவனுக்கும், பகவத்விஷயத்தைச்சொல்லலாகாது என்றும், பகவத்பக்தனுக்கும், ஆஸ்திகனுக்கும், சிரத்தையுள்ளவனுக்கும்தான் சொல்லவேண்டுமென்றும் இருக்கிற சாஸ்த்ரார்த்தம் எடுத்துக் காட்டப்படலாயிற்று.

மேற்கொண்டு கதையைச் சொல்ல ஆரம்பித்து பூதேவி பசுவின் உருவம் தரித்து ப்ரஹ்மாவிடம் சென்று தனக்கு பாரமாயிருக்கும் அசுரர்கள் ஒழியும் பொருட்டு உபாயம் செய்து பூபாரத்தை நீக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ள ப்ரஹ்மாவும் ஸமஸ்தமான தேவர்களையும், முக்கண்ணனையும் கூட்டிக்கொண்டு திருப்பாற்கடலையடைந்து புருஷஸூக்தத்தால் பகவானை வேண்டிக்கொண்டார். அப்பொழுது பகவான் ப்ரஹ்மாவுக்கு நேரில் ஸேவை ஸாதிக்காமல் அவர் செவிகளில்மட்டும் படும்படி சில வார்த்தைகளை உரைத்து 'தாம் ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்து பூபாரத்தைநீக்குவதாயும், அப்போது தன்னை பூஜிப்பதற்காக பல தேவதாஸ்த்ரீகள் கோபஸ்த்ரீகளாகப் பிறக்கவேண்டுமென்று பலமஹரிஷிகள் பசுக்களாகப்பிறக்கும்படியும்நியமனம்செய்தாயிற்று.

இவற்றால் பூபாரத்தை நீக்குவதென்பது ப்ரஹ்மதேவனுக்கும் ஸாத்யமான கார்யமல்ல என்பது வெளியாயிற்று. இங்கு தேவர்களுடன் சென்றார் என்றதாலேயே தேவர்களில்

ப்ரதானரான பரமசிவனும் சென்றுர் என்று கிடைக்குமாயிருக்க 'பரமசிவனையும்' என்று தனித்தெடுத்தது 'பரமசிவன் ஜகத்காரணம்' என்ற சிலர்களின் ஸந்தேஹத்தை நீக்குவதற்காகும். இத்தால் பரமசிவனும் மற்றதேவர்களுக்கு ஸமானமானபடியால் அவர் ஜகத்காரணமாக மாட்டார் என்று தேறியது.

பகவானை ப்ரஹ்மா புருஷஸூக்தத்தால் துதித்தார் என்றதால் அவனை வசீகரிக்க ஏற்பட்ட உபாயங்களில் புருஷஸூக்தத்திற்கு மேற்பட்ட உயர்ந்த ஸூக்தம் இல்லை என்பதும் தேறியது. **'पुंसूक्तं सर्ववेदप्रं नमहितं'** என்று ஸ்ரீதேசிகன் புருஷஸூக்தம் மூன்று வேதங்களிலும் ஓதப்படுகிறது என்று இதன் பெருமையைக் கொண்டாடுகிறுர்.

மேல் மதுராபட்டணத்தில் ஸ்ரீவஸுதேவர் க்ருஹத்தில் பெருமாள் அவதரிக்கத் திருவுள்ளம் பற்றினுரென்று மதுரையின் பெருமையைப் பேசும்பொழுது **'मधुरा भगवान् यत्र नित्यं सन्निहितोहरिः'** என்றதால் அந்த ஸ்தலம் ஏற்கனவே பகவானுக்கு நித்யவாஸஸ்தலம் என்று ஸாதிக்கிறுர். அனுதால் **'अयोध्या मथुरा माया काशी कांची अवन्तिका । पुरी द्वारवतीचैव सप्तैता मुक्तिदायकाः'** ॥ என்ற முக்திதரும் நகரேழில் முக்யமான மதுராபட்டணத்தின் பெருமை விவரிக்கப்பட்டது. இது முன்காலத்தில் மதுவனமென்ற பெயருடன்காடாகயிருந்ததாகவும் பகவானுக்கு நித்யவாஸஸ்தலம் என்ற பெருமையை முன்னிட்டு பலமுனிவர்களும் அம்பரீஷ சக்ரவர்த்தி முதலியவரும் இங்கு தபஸ் செய்து ஏகாதசி வ்ரதாநுஷ்டாநம் முதலியதைச் செய்தார்களென்றும், அப்போது ஒரு ஸமயம் துர்வாஸமஹரிஷி அம்பரீஷ சக்ரவர்த்தியிடம் அபசாரப்பட்டு **'त्रीन् लोकान् संपरिक्रम्य'** என்கிற கணக்கில் எங்கும் திரிந்து அடைக்கலம் பெறமாட்டாமல் அந்த அம்பரீஷ சக்ரவர்த்தியையே தாள்பற்றி உயிர் பெற்றுர் என்றும் புராணவரலாறு. பின் ஒரு ஸமயம் அந்த மஹரிஷிகளுக்கு விரோதியாய் அந்த மதுவனத்தில் வஸித்து வந்த லவணுஸுரனை ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனின் நியமனத்தால் அவர் தம்பி சத்ருக்னன் அங்கு சென்று அவனைக்கொன்று, அவ்விடத்தில் மதுரைஎன்ற அழகிய பட்டணத்தை நிர்மாணித்து 12 வருஷங்கள் அங்கு வஸித்து வந்தார் என்றும் ராமாயண கதை கூறும்.

இத்தால் இது பகவானுக்கு வாஸஸ்தலம் என்ற காரணத்தாலேயே ஸ்ரீக்ருஷ்ணுவதாரத்திற்கு முன்பே அங்கு யதுவம்சத்து அரசர்கள் வஸித்து வந்தார்களென்றும், பாகவதர்களுக்கு பகவதபிஷ்டிதமான ஸ்தலமே வாஸபோக்ய மென்றும் வெளியிடப்படலாயிற்று.

பிறகு தேவகீ வஸுதேவர்களுக்கு கல்யாணம் நடந்து ஊர்வலமாகச் செல்லுகையில் தன் சிறிய தகப்பன் பெண்ணுன தேவகியிடம் உண்டான அன்பால்கம்ஸன் தானே தேரைச்செலுத்த அப்போது 'கம்ஸா! இவளுடைய எட்டாவது கர்பத்தால் உனக்கு மரணம் நேரப்போகிறது' என்று ஆகாயத்தில் ஒலித்த அசரீரி வாக்கைக் கேட்டு கம்ஸன் அப்போது அவளைக்கொல்ல யத்தனித்தான் என்று கதை.

இத்தால்– உலகத்தில் பகவானுல் ஸ்ருஷ்டிக்கப்பட்டவஸ்துக்களில் ஒன்றுக்கொன்றும்ஆநுகூல்யமே ஸ்வபாவமென்றும், அதற்கு மாருக அவைப்ராதிகூலமாகத்தோன்றுவதற்குத்தான் காரணம் தேடவேண்டுமென்றும், ஸம்ஸார தசையில் அவரவர்களின் கர்மாநுகுணமாக சிலவஸ்துக்கள் சிலகாலத்தில்ப்ராதிகூலமாகின்றன; சில அல்பாநுகூலமாய் நிற்கின்றன என்றும், மோக்ஷதசையில் அந்தகர்மங்கள் கழிந்ததும் அவைகளில் இயற்கையான பூர்ணுநுகூல்யம் ப்ரகாசிக்கும் என்றும் சொல்லப்படுகின்ற வேதாந்தார்த்தம் வெளியிடப்பட்டதாகிறது. இதைத் தவிர ப்ராணிஹிம்ஸையே செய்யத்தகாது; அதிலும் ஸ்த்ரீயை, அதிலும் தங்கையைக் கொல்வது, அதிலும் கல்யாணகாலத்தில் கொல்வது மிகுந்தபாபத்திற்குஇடமாகுமென்றும் காட்டப்பட்டது.

மேல் வஸுதேவர் தேவகியை மரணத்திலிருந்து மீட்க முயர்ச்சிக்கையில் **'मृत्युर्बुद्धिमता पोहया यावद्बुद्धि बलोदयम्'** என்ற ச்லோகத்தால் சக்தனுன புருஷன் தனக்கோ, தன்னைச்சேர்ந்தவர்களுக்கோ ஆபத்து வந்தபோது தன் சக்திக்குத் தக்கவாறு அவ்வாபத்தைத் தவிர்க்க முயலவேண்டும்; இல்லையேல் பாபம் ஸம்பவிக்கும் என்றும் காட்டப்பட்டது.

அதன்பின்வஸுதேவர்தமக்குப்பிறந்தமுதல் குழந்தையை தன் வாக்குப்படி கம்ஸனிடம் ஸமர்ப்பிக்க அவன் அதைக்கண்டு 'இந்தக் குழந்தையிடம் எனக்கு பயமில்லையே, தேவகியின் எட்டாவது குழந்தையிடம்தான் பயம். ஆகையால் இக்குழந்தையை நீரே எடுத்துச்

செல்லலாம் என்றான். வஸுதேவரும் கம்ஸனுடைய அநுக்ரஹத்தில் ஸந்தோஷமடையாமல் வீடு சென்றார். பிறகு நாரதரின் கலக வார்த்தையைக் கேட்டு மறுபடி அக்குழந்தையையும், அதன்பின் பிறந்த குழந்தைகளையும் கொன்று விட்டு தேவகீ வஸுதேவர்களையும் சிறையிலிட்டான்.

இத்தால் 'अव्यवस्थितचित्तस्य प्रसादोपि भयंकरः' (சபலனுடைய அனுக்ரஹமும் பயத்திற்கிடமானதே) என்ற நீதி சாஸ்த்ரம் அறிவிக்கப்பட்டது.

கடைசியில் நாரதமஹரிஷியின் கலஹவார்த்தையால் கம்ஸன் தேவகீ வஸுதேவர்களையும், நந்தகோபர் முதலியவர்களையும் தேவாம்சர்களென்றும், தன்னைச்சேர்ந்த லோகோபத்ரவகாரிகளை அஸுராம்சர்களென்றும், தன்னை முன் ஒருஸமயம் விஷ்ணுவால் கொல்லப்பட்ட காலநேமி என்ற அஸுரனென்றும் தெரிந்து கொண்டு யாதவர்களுடன் விரோதம்பாராட்டியும் தன் பிதாவான உக்ரஸேன மஹாராஜனையும் சிறையிலிட்டு தானே ராஜ்யாதிகாரத்தை ஏற்று நடத்தினன் என்றும் கதாபாகம் சொல்லுகிறது.

இங்கு ஸர்வப்ராணிகளுக்கும் பரம ஸுஹ்ருத்தான நாரதர் ஏன் இப்படி கலஹம் செய்ய வேண்டும்; இவருக்கோ உலகத்தில் பெற வேண்டிய லாபமொன்றுமில்லை; இவர் கலஹ வார்த்தையைக் கேட்டு கம்ஸன் கெட்டகாரியங்களில் இறங்கினல் அதனல் இவருக்குப் பாபம் ஏற்படாதா? எனில் இதற்கு ஸமாதானம் வருமாறு — இவர் ஸர்வப்ராணி ஸுஹ்ருத்தாயிருந்து வைத்தே இம்மாதிரி கார்யம் செய்கின்றவர். பகவானிடம் அளவு கடந்த அன்பு கொண்டமையால் அவன் விபூதிகளிடத்தும் அத்தகைய அன்பு கொண்டவரேயாவர். பாபிகளிடத்திலும் அவர்களின்பாபத்தைப்போக்கி அவர்களை எவ்வாறு சுத்தர்களாக்கி இறைவனின் அருள் சூடுமாறு செய்யலாம் என்பதில் கருத்துடையவர். சேதனர்களில் அவர்களின் புண்யபாபாநுகுணமாகச் சிலர் தேவப்ரக்ருதிகளாயும், சிலர் அஸுரப்ரக்ருதிகளாயும் பிறக்கிறார்களே யல்லது அவர்களின் ஸ்வரூபத்தில் தேவப்ரச்ருதி அஸுரப்ரக்ருதி என்பதில்லை.

அளவில்லாதபாபம் செய்தவன் ஒருவன் அந்த பாபபலனை அநுபவித்து பின் அவன் க்ஷேமப்படுவது என்பது ஸமுத்ரம் அலையடங்கிய பின் குளிக்கலாமென்றதோடொக்கும். அப்படிப்பட்டவன் விஷயத்திலும் அவன் பாபத்தையே மேன்மேலும் வ்ருத்தி செய்து, பகவானிடத்திலும், அவனடியார்களிடத்திலும் அபசாரப்படும்படி செய்து, அதன் மூலம் அவர்களிடம் த்வேஷத்தையோ, பயத்தையோ உண்டாக்கி இவ்விதத்தால் அவனுக்கு இடைவிடாமல்பகவத்ஸ்மரணம்இருக்கும்படிசெய்து அதன் மூலம் அவனை சுத்தமாக்கி, பகவானைக் கொண்டு கொல்லும்படி செய்தல் ஸர்வபூத ஸௌஹார்தத்தின் கார்யமேயாகும். இதுவும் அவன் ஏதாகிலும் ஒரு ஜன்மத்தில் செய்திருந்த ஒரு ஸுக்ருத விசேஷத்தின் பலமாக வரும். கோபிகள் காமத்தால் க்ஷேமத்தைப் பெற்றார்கள். சிசுபாலன் த்வேஷத்தால், கம்ஸன் பயத்தால், யாதவர்கள் ஸம்பந்தத்தால், பாண்டவர்கள் ஸ்நேஹத்தால், மஹரிஷிகள் பக்தியால் க்ஷேமமடைந்தார்கள். இவர்கள் எல்லோரிடத்திலும் ஏதாவது ஒருவிதம் பகவானுடைய ஸ்மரணம் தொடர்ந்து இருக்கிறது. ஆகையால்தான் கம்ஸனுடைய மரணகாலத்தில் 'सनित्यदोद्विग्नधिया तमीश्वरं पिबन्वदन्वापि चरन् स्वपन् श्वसन् । ददर्श चक्रायुधमग्रतो यत स्तदेव रूपं दुरवापमाप' ॥ என்றார் சுகமஹரிஷி. அவன் அளவு கடந்த பயத்தால், பான, போஜன, சயந, நித்ரை முதலிய ஸகலவிதமான அவஸ்தைகளிலும் சக்ரபாணியான பகவானையே நினைத்திருந்து புண்யவான்களாலும் அடைய முடியாத அந்த ரூபத்தையே அடைந்தான் என்று இந்த ச்லோகத்தின் பொருள். ஸாரூப்ய முக்தியைப் பெற்றான் என்று இதற்கு வீரராகவீய வ்யாக்யாநம். 'गोप्यः कामाद्भया त्कंसः' என்ற ச்லோகமும் இவ்வர்த்தத்தையே சொல்லுகிறது. ஆகவே நாரதரின் கலஹம் ஸகலலோகமும் க்ஷேமமடைவதற்கேயாம் என்பது வெளிப்படை. இவ்வாறே மஹரிஷிகளின் சாபமும் அநுக்ரஹார்த்தமானதே என்பதை மற்றொரு ஸமயம் விளக்குவோம்.

श्रीः

॥ श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

॥ श्रीमते श्रीवण्शठकोप श्री वीरराघवशठकोप यतीन्द्र महादेशिकाय नमः ॥

விஜயகீதம்

ஜயது ஜயது தேவோऽஹோபிலேசோ ந்ருஸிம்ஹோ
ஜயது ஜயது நித்யம் தத்ப்ரியா லோகமாதா ।
ஜயது ஜயது வண் ஶடாரியதீந்த்ரோ
ஜயது ஜயது லோகே வீரராகவ்ய ஶடாரிஃ ॥ 1

[ஸர்வ ரக்ஷகனும் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ராதிபனுமான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் விளங்கட்டும்; ஸர்வலோகமாதாவான அவனது ப்ரியை மஹாலக்ஷ்மியும் விளங்கட்டும். ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் விளங்கட்டும்; இவ்வுலகில் ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விளங்கட்டும்.]

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹோ நிஜசரணநதாம்ஸ்த்ராதுகாமோ ஹ்யவந்த்யாம்
பாரத்வாஜான்வயேऽஹோ நிஜஜநுரபஜத் ஸ்ரீமதாம் தத்ர கேஹே ।
க்ருத்வா லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ் ஸ ச நிகிலகலாம் ஸார்வபௌமாய யத்வ:
ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹார்யஶடரிபுயதிநே யோகிநே ந்யஸ்தபார: ॥ 2

[ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தன் திருவடிகளையடைந்து வணங்கும் பக்தர்களைரக்ஷிக்க எண்ணி, பாரத்வாஜருடைய வம்சத் (கோத்ரத்) தில் கர்ப்பஸ்ரீமான்களாயும் பரமைகாந்தி ஸார்வபௌமர்களாயுமுள்ள மஹான்களுடைய திருமாளிகையில் தனது ஜ்ந்மாவை அடைந்தும், ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் என்னும் திருநாமத்தையடைந்தும், ஸகலவித்யாபாரங்கதராய் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் ஸன்னிதியில் ஆத்மபரஸமர்ப்பணம் பண்ணி தங்யராக விளங்குகிறார்.]

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑍍𑌭𑍋𑌨𑌿𑌧𑌿 𑌮𑍇𑌨 𑌮𑍇𑌤𑍍𑌯 𑌬𑌹𑌵𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌾𑌂
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍁𑌤𑌿𑌨𑍍𑌨𑌂 𑌗𑍁𑌣𑌗𑌣𑍇 𑌹𑌯𑌾𑌙𑍍𑌗𑌂 𑌶𑍌𑌰𑍇𑌰𑍍𑌵𑍍𑌯𑌸𑍍𑌸𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌯𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌯 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌗𑌾𑌸𑍍𑌯𑌾𑌯𑌾𑌵𑌤𑌾𑌰𑌂 𑌬𑍁𑌧𑌾
𑌸𑌨𑍍𑌤𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌤𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌵𑌸𑍁𑌧𑌾𑌯𑌾𑌮𑍇𑌵𑌂 𑌯𑌶𑍋𑌧𑌨𑌂 𑌵𑍁𑌧𑌃 ॥ 3

[ஸதாசாரசீலராயும், சமதமாதி கல்யாணகுணங்களோடு கூடினவராயும், வித்யாநிதியாயுமுள்ள இவரிடம் அனேகசிஷ்யர்கள் உயர்ந்ததான வேதாந்தவித்யையை அதிகரித்து, இவரை ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனின் அவதாரமாகவும், ஸ்ரீபாஷ்யகாரரே அவதரித்திருப்பதாகவும், ஹயக்ரீவனுடைய அவதாரமாகவும், கீர்த்திமானான ப்ரஹ்மவித்தாகவும் கொண்டாடுகிறார்கள்.]

𑌶𑍍𑌰𑍀𑌮𑌣𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 𑌤𑌦𑍁𑌪𑌰𑌿 𑌪𑌰𑌾𑌭 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌯𑌣𑍇 𑌬𑍁𑌧𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑌰𑌂 𑌕𑍃𑌤𑍀 𑌯𑌤𑌿𑌵𑌰𑌾𑌶𑍍𑌰𑌮𑍇 𑌸𑌮𑌭𑍍𑌯𑌷𑌿𑌚𑍍𑌯 𑌚 𑌸𑍍𑌵𑌂 𑌪𑌦𑌂 𑌵𑍍𑌯𑌧𑌾𑌤𑍍 ॥ 4

[ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், அநந்த கல்யாண குண ஸாகரமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் தனக்குப்பிறகு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாராதனத்திற்கு இம்மஹானை ஏற்படுத்த எண்ணி ஸந்யாஸாச்ரமத்தைக்கொடுத்து தனது ஸ்தாநத்தையும் கொடுத்தருளினார்.]

𑌆𑌰𑌾𑌧𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌨𑌰𑌹𑌰𑌿𑌂 𑌯𑌤𑌿𑌃 𑌪𑌾𑌵𑌯𑌨𑍍 𑌜𑌨𑌾𑌨𑍍 𑌸𑌂𑌚𑌾𑌰𑌾𑌤𑍍 𑌹𑌿 ।
𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌨𑍍 𑌨𑌿𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌘𑍋𑌷𑌣𑌂 𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌮𑌤𑌂 𑌪𑍍𑌰𑌯𑌯𑌾𑌵𑌿𑌹 ॥ 5

𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌂 𑌕𑌨𑌕𑌵𑌲𑍍𑌲𑌿𑌕𑌾𑌂 𑌪𑍋𑌧𑌿𑌰𑌾𑌲𑌯𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌶𑍋𑌭𑌿𑌤𑌃 ।
𑌸𑌂𑌚𑌰𑌨𑍍 𑌬𑌹𑍁𑌨𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑌕𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌰𑌮𑍍𑌯𑌕𑌂 𑌪𑌤𑍍𑌤𑌨𑌂 ॥ 6

[ஆஸ்தாந பட்டாபிஷேகம் ஆனபிறகு ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ஆராதித்துக்கொண்டும், தன்னுடையஸஞ்சாரத்தினால் ஜனங்களை பவித்ரர்களாகச் செய்துகொண்டும், வைதிகமத ப்ரசாரம் செய்துகொண்டும் தன்விஜயயாத்ரையைத் துவங்கினார். திருவள்ளூரில் ஸ்ரீ வீரராகவனையும் கனகவல்லித்தாயாரையும் ஸேவித்து விடைபெற்றுக்கொண்டு அனேக அக்ரஹாரங்களில் ஸஞ்சாரம் செய்து மிகவும் அழகான சென்னைப்பட்டணத்தை அடைந்தார்.]

𑌤𑌤𑍍𑌰 𑌸𑌜𑍍𑌜𑌨𑍈𑌃 𑌪𑌰𑌿𑌚𑌿𑌤𑍋 𑌹𑌿𑌤𑍋𑌪𑌦𑍇𑌶𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍈𑌃 𑌤𑌾𑌨𑍍 𑌤𑍋𑌷𑌯𑌨𑍍 𑌬𑌹𑍂𑌨𑍍 ॥
𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌤𑌤𑍋 𑌗𑍍𑌰𑌾𑌮𑌸𑌂𑌘𑌯𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌪𑌤𑍍𑌤𑌨𑌂 𑌕𑌟𑌪𑌨𑌾𑌮𑌕𑌮𑍍 ॥ 7

[அங்குள்ள ஸச்சிஷ்யர்களால் நன்கு ஆராதிக்கப்பட்டவராய் தனது ஸரளமான ஹிதோபதேசங்களால் அவர்களை ஸந்தோஷிப்பித்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு அனேக க்ராமங்களில் மத்யேமார்க்கம் ஸஞ்சாரஞ்செய்து கடப்பையென்னும் பட்டணத்திற்கெழுந்தருளினார்.]

𑌸𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌹𑍋𑌬𑌿𑌲𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌾𑌂 𑌯𑌾𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤 𑌗𑍃𑌹𑌮𑍍 ।
𑌤𑌦𑌰𑍍𑌥𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌯𑌾𑌮𑌾𑌸 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌯 𑌜𑌵𑌾𑌤𑍍 𑌸𑌮𑌸𑍍𑌤 𑌭𑍍𑌯𑌃 ॥ 8

[அங்கு ஸ்ரீமதஹோபிலம் செல்லும் யாத்ரிகர்களின் ஸௌகர்யார்த்தமாக ஒரு அஹோபிலமடம் இருப்பது அவச்யமென்று கருதி, அனேக ரூபாய்களைக்கொடுத்து ஒரு வீட்டை அதற்காக வாங்கியாயிற்று. அங்கு ஸமர்த்தர்களானவர்களை நியமித்து அவ்வீட்டை மடமாக சீக்கிரத்தில் கட்டி முடித்தாயிற்று.]

[illegible]
[illegible] 9

[அங்கிருந்து ஸ்ரீ அஹோபிலத்திறகு எழுந்தருளி '[illegible]' என்று சொல்லப்பட்ட ஒன்பது ந்ருஸிம்ஹர்களையும், ப்ரஹ்லாதவரதனையும் ஸேவித்து, அங்கே ப்ராசீனமாகக் கட்டப்பட்டிருக்கும் மண்டப கோபுராதிகளின் அமைப்பைக் கண்டு வியந்து ஆநந்தமடைந்தார். தானும், நித்ய பகவதாராதனத்திற்கு வேண்டியதற்காக 5000 ரூபாய் செலவில் ஒரு கிணற்றை வெட்டியும், பழைய குளங்களைச் சீர்திருத்தியும் அனேகவித கைங்கர்யங்களைச் செய்தாயிற்று.]

[illegible]
[illegible] 10

[வைதிகஸ்ரீ வ்ருத்தியடையவும், சாஸ்த்ரோக்த தர்மங்களை சிறுவயதுமுதல் அப்யஸித்து நல்ல பழக்கம் ஏற்படுவதற்காகவும் பல ப்ராஹ்மணச் சிறுவர்களின் கல்வி போதனைக்காக சென்னை, பாதூர் முதலியவிடங்களில் பாடசாலைகளை ஏற்படுத்தினர்.]

[illegible]
[illegible] 11

[அங்கு இரண்டுமாதகாலமெழுந்தருளியிருந்து, சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவத்தையநுஷ்டித்து, சிஷ்யர்களால் நன்கு ஆராதிக்கப்பட்டு உத்தானமானபிறகு திரும்பி கடப்பைக் கெழுந்தருளி நன்கு கட்டப்பட்ட மடத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஸந்தோஷமடைந்தார்.]

[illegible]
[illegible]

[அங்கிருந்து பங்களூர்வாஸிகளான அனேக சிஷ்யர்களின் ப்ரார்த்தனைக்கிணங்கி மைஸூர் அரசாங்க பரிவாரங்களாலும் அதிகாரிகளாலும் எதிர்கொண்டழைக்கப்பட்டும் அரசாங்கமர்யாதைகளுடன் ஸத்கரிக்கப்பட்டும் பங்களூர் எழுந்தருளினர்.]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 13

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 14

[அங்கிருந்து மைஸூர் மஹாராஜாவினல் ப்ரீதியுடன் ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ அழகியசிங்கர் யதாக்ரமமான மர்யாதைகளுடன் ராஜப்ரதானிகளும் பரிவாரங்களும் புடைசூழ மைஸூர் எழுந்தருளினர். குதிரைகளும், யானைகளும், ஸேனாபதிகளும், மந்த்ரிகளும் எதிர்கொண்டழைக்க மஹாராஜாவின் அரண்மனைக்கெழுந்தருளி, அங்கே மஹாராஜாவின

னும், அவருடைய குடும்பத்தாராலும் நன்கு ஆராதிக்கப்பட்டார்.]

𑌪𑌾𑌦𑌪𑍂𑌜𑌨𑌂 𑌰𑌾𑌜𑌵𑌂𑌶𑌜𑍈𑌃 𑌲𑌬𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 𑌸𑌦𑌾 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌂 𑌮𑍁𑌦𑌾 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌯𑍋𑌗𑌿𑌰𑌾𑌟𑍍 𑌤𑍇𑌭𑍍𑌯 𑌆𑌶𑌿𑌷𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌫𑌲𑌂 𑌸𑌾𑌧𑌯𑌨𑍍𑌨𑌸𑍌 ॥

[ராஜாவினுலும் ராஜகுடும்பத்தாராலும் பாதபூஜைபண்ணப்பட்ட பிறகு அவர்களுடைய பூஜையால் ஸந்துஷ்டராகி அவர்களுக்கு பலமந்த்ராக்ஷதைகளை அநுக்ரஹித்து அவர்களை க்ருதார்த்தர்களாகப் பண்ணினர்.]

𑌯𑌦𑍁𑌶𑍈𑌲𑌶𑍇𑌖𑌰𑌂 𑌸𑍇𑌵𑌿𑌤𑌂 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌿𑌜𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌮𑍁𑌦𑌾 ।
𑌯𑌾𑌦𑌵𑌾𑌚𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌯𑍋𑌗𑌿𑌰𑌾𑌟𑍍 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍋𑌗𑍍𑌯𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌣𑌧𑍀𑌃 ॥ 16

[யாதவாத்ரியில் திருநாராயணனை ஸேவிக்கத் திருவுள்ளம்பற்றி, மிக்க பக்தியுடன் பரிஜநஸஹிதராகத் திருநாராயணபுரமெழுந்தருளி, அங்கு செல்லப்பிள்ளையின் அநுக்ரஹத்திற்குப் பாத்ரராகி, எம்பெருமானுடைய மாலை, பரிவட்டம் முதலிய ப்ரஸாதங்களை ஸ்வீகரித்து, தங்யம்மங்யரானர்.]

𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍀𑌤𑌟𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑌨𑌿𑌲𑌯𑍇 𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂
𑌨𑌾𑌨𑌾𑌦𑍇𑌶𑌗𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌜𑌨𑌾𑌃 𑌸𑌂𑌸𑍇𑌵𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑍋𑌤𑍍𑌸𑌵𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑌮𑌾𑌨𑌤𑍇𑌨 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌵𑌿𑌤𑌾
𑌦𑍋𑌲𑌾𑌰𑍋𑌹𑌣𑌮𑍋𑌤𑍍𑌸𑌵𑌂 𑌯𑌦𑍁𑌵𑌰𑌂 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌭𑌵𑌨𑍍 ॥ 17

[ஸ்ரீ கல்யாணீ புஷ்கரிணிக்கரையில் விளங்காநிற்கும் தமது மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகியசிங்கரை திருநக்ஷத்திரமஹோத்ஸவதினத்தில் நானுதேசங்களிலிருந்தும் வந்திருந்த சிஷ்யஜனங்கள் ஸேவித்தும், ஸ்ரீ அழகியசிங்கரின் ஸ்ரீபாததீர்த்தத்தை மிக பக்தியோடு கூட சிரஸ்ஸினுல் வணங்கி பெற்றுக்கொண்டும், டோலோத்ஸவலோலுபனை யதுவம்சதிலகனை (கண்ணனை) ஸேவித்தும் க்ருதார்த்தர்களானுர்கள்.]

𑌨𑌗𑌵𑌰𑌶𑌿𑌖𑌰𑌵𑌿𑌰𑌾𑌜𑌦𑍍𑌦𑍇𑌵𑌂 𑌨𑌰𑌹𑌰𑌿𑌮𑍇𑌷 𑌨𑌨𑌾𑌮 𑌸𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 ।
𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌾𑌰𑌿𑌯𑍋𑌗𑍀 𑌜𑌯𑌤𑌾𑌚𑍍𑌛𑌰𑌦𑌾𑌂 𑌶𑌤𑌮𑌿𑌹 𑌵𑌿𑌜𑌯𑍀 ॥ 18

[அங்கு மலைமேலெழுந்தருளியுள்ள யோகந்ருஸிம்ஹனை பக்தியுடன் ஸேவித்தருளினர். ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் இன்னும் பல்லாண்டு பல்லாண்டுகளாக எழுந்தருளியிருந்து விஜயசீலராக விளங்கவேண்டுமாறு ப்ரார்த்திக்கிறேம்.]

𑌰𑌾𑌮𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌃 ।
𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑍇 𑌶𑌠𑌾𑌰𑌾𑌤𑌿𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑍇𑌶𑌿𑌕𑍋𑌤𑍍𑌸𑌵𑍇 ॥

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜய ஞூ மார்கழி மீ 1953-1954 ஞூ டிஸம்பர்-ஜனவரி மீ

[தக்ஷிணாயனம்; ஹேமந்தருது; தனுர் மீ]

16—12—53	1௳	புதன்கிழமை	சாப சுக்ல ஏகாதசிதிதி; திருப்பள்ளியெழுச்சி.
1—1—54	17௳	வெள்ளிக்கிழமை	ஸர்வஏகாதசி; விசாகம், ஸ்ரீ அஹோபில மடம் 40-வது பட்டம் (காரக்குரிச்சி) ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம். (வார் திருநக்ஷத்ரம்.
3—1—54	19௳	ஞாயிற்றுக்கிழமை	கேட்டை, ஸ்ரீதொண்டரடிப்போடியாழ்
4—1—54	20௳	திங்கட்கிழமை	ஸர்வ அமாவாஸ்யை.
10—1—54	26௳	ஞாயிற்றுக்கிழமை	பூரட்டாதி, ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டம் (காரக்குரிச்சி) ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்.
13—1—54	29௳	புதன்கிழமை	சாபசுக்லநவமிதிதி; போகிபண்டிகை; மகரரவி 52-56. (மறுநாள் ஸங்க்ரமண தர்ப்பணம்)
14—1—54	தைமீ 1௳	வியாழக்கிழமை	மகர சுக்ல தசமி-ஏகாதசி திதித்வயம்; ஸங்க்ராந்தி; திருப்பாவை சாற்றுமுறை.
15—1—54	2௳	வெள்ளிக்கிழமை	ஸர்வ பீஷ்ம ஏகாதசி; கனுபாரி வேட்டை.

—

ஸ்ரீகோதாஸ்துதி:

ஸ்ரீ ஆண்டாள் விஷயமாக ஸ்ரீதேசிகன் ஸாதித்திருக்கும் ஸ்ரீகோதாஸ்துதிக்கு எளிய தமிழ்நடையில் அர்த்தத்துடன் கூடிய புஸ்தகம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸில் கிடைக்கும். விலை அணா நான்கு. முன்னதாக 0–5–0 ஸ்டாம்பு (தபால் செலவு உள்பட) அனுப்புபவர்களுக்கே ஷை புஸ்தகம் அனுப்பப்படும்.

Regd. No. M. 4437.

முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில மாறுதல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:-

N. Krishnamachariar,
Sri Nrisimhapria Office,
Sri Ahobila Mutt, Trivellore.

என். கிருஷ்ணமாசாரியர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்

இனி சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும்.

The Manager,
Sri Nrisimhapria Office,
Sri Ahobila Mutt, Trivellore.

மானேஜர்,
ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்
ஸ்ரீ அஹோபில மடம், திருவள்ளூர்.

சந்தாதாரர்கள் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களை மேற்கண்ட விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.

* * * * *

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமாதானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

The Editor,
Sri Nrisimhapria,
Sri Ahobila Mutt,
Sanskrit College,
Madurantakam.
S. Rys.

ஸம்பாதகர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
ஸ்ரீ அஹோபிலமடம்,
ஸம்ஸ்க்ருத கலாசாலை,
மதுராந்தகம்.
S. Rys.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobila-
-mutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobila Mutt Sanskrit College, Madurantakam.